ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

**April - June 2013**

விஜய வருட
சித்திரை - ஆனி 2013
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது
ஜெயந்தி விழாச் சிறப்பிதழ்

## வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

---

## வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ


**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**





NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.



**HONEST AND FRIENDLY SERVICE**
**CALL: MR. P. SINGARAJ**
**416-993-8443**
**905-471-3058**


உ

சிவமயம்

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185



**கனடா மலர் 14:**
**இதழ் 2**
**விஜய வருடம்**
*சித்திரை - ஆனி*
*திரு. ஆண்டு -2044*
*ஆங்கில ஆண்டு 2013*

**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 2 |
| எங்குமுள்ள பிள்ளையார் | 4 |
| பிரார்த்தனையின் பலன் | 5 |
| ஆறுமுகநாவலர் | 10 |
| பெருமான் செய்த பிழை | 14 |
| நினைமின் மனனே! நினைமின் மனனே! | 17 |
| திருத்தொண்டு நெறி | 21 |
| எழுமின் விழுமின் ...... | 25 |
| இளையதலைமுறையின் இணையில்லா வழிகாட்டி | 29 |
| சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிகள் | 33 |
| இந்து சமயப் பேரவை நடத்திய சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு விழா | 36 |
| இந்து சமயப் பேரவைச் செய்திகள் | 42 |
| ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 47 |

# சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் வங்காளக் குடும்பத்தில் சட்டவல்லாளர் விஸ்வநாத தத்தருக்கும் புவனேஸ்வரி அம்மையாருக்கும் கல்கத்தாவில் 12.01.1863ல் அவதரித்தவர். அவர் இப்புவியிலே தோன்றி இவ்வாண்டுடன் 150 ஆண்டுகள் ஆகின்றன. உலகம் எங்கும் உள்ள இந்துக்களும் அவரது ஆளுமை மிக்க ஆன்மிக உரைகளால் ஞானம்பெற்ற பிற மதத்தவரும் அவரது 150ஆவது அவதாரத் திருநாளைக் கொண்டாடுகின்றார்கள்.

ஒன்ராறியோ இந்து சமயப்பேரவையும் கடந்த யூன் மாதம் 15ஆந் திகதி சனிக்கிழமை அருள்மிகு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் சுவாமி விவேகானந்தருக்கு விழா எடுத்து, இந்து சமயத்துக்கும் பாரதத்துக்கும் அவர் ஆற்றிய அருளார்ந்த சேவைகளுக்கு நன்றி தெரிவித்தது.

நரேந்திரன் என்னும் பிள்ளைத் திருநாமங்கொண்ட இவர் முன்செய்த தவத்தாற் போலும் இளவயதிலேயே ஆன்மீக நாட்டங்கொண்டு பரம்பொருள் பற்றிய அறிவுவிசாரணையில் ஈடுபடலானார். இவரது ஐயங்களைத் தீர்த்த அருட்செல்வர் இராமகிருஷ்ணரைக் குருவாகக் கொண்டார். குருவானவர் 1886ல் இறைவனடி எய்தியதும் அவரது சீடர்கள் நரேந்திரனைத் தங்கள் தலைவராகத் தெரிவுசெய்தனர். குருநாதர் வழி மக்களுக்குச் சேவைசெய்ய நரேந்திரன் துறவுபூண்டார். துறவித் திருநாமமே விவேகானந்தர் என்பது.

விவேகானந்தர் சிறந்தவொரு சொற்பொழிவாளர்; கேளாரும் வேட்பப் பேச வல்லவர். இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிற் சொற்பொழிவாற்றி மக்கள் மனங்களிற் குடியேறினார். 1893 செப்டம்பர் 11ல் அமெரிக்காவில் உள்ள சிக்காகோவில் நடந்த பலசமயப் பாராளுமன்றத்தில் உரையாற்றச் சென்றார். அங்கும் தொடர்ந்து அமெரிக்காவின் பிற பகுதிகளிலும் பின்னர் ஐரோப்பாவிலும் ஆற்றிய சொற்பொழிவுகளாற் பலரைக் கவர்ந்தார். அதனால் இந்து சமயத்தின் மேன்மை மேற்குலகத்தில் நன்கு பரவலாயிற்று. பலர் அவரது சீடர்களாயினர். திரும்பிப் பாரதம் வருகையில் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

அடிப்படையில் அவர் ஒரு வேதாந்தி. வேத போதனைகளில் அசையாத நம்பிக்கையுடையவர். எனினும் வேதங்களை

*நமது மனிதத் தன்மை நிறைவு பெறும் நிலையே மதம்*

ஆதாரமாகக்கொண்ட சமயங்களுக்கிடையில் அவர் பேதங்கள் பார்க்கவில்லை.

விவேகானந்தரின் சொற்பொழிவுகளும் எழுத்துக்களும் ஆழமானவை; ஆதாரபூர்வமானவை; மூடநம்பிக்கை முட்களைக் களைந்து இந்து சமயத்தின் உண்மைகளை உலகுக்கு உணர்த்தியவை.

உண்மைகளை விளங்கிக்கொள்ளாது இந்துக்கள் மதம்மாறுவதும் மூடநம்பிக்கை என்றே அவர் கருதினார். அவர் சிந்தனைகள் இந்துக்களை வழிப்படுத்துவதாக!

- வி. கந்தவனம்

---

## 2012 தை மாதம் தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு வருடந்தோறும் நிரந்தர நிதி உதவி வழங்குவோர்

| | |
|---|---|
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | $ 200.00 |
| திரு. சண்முகநாதன் சரவணன் | $ 200.00 |
| செல்வன். மனோகாந்தன் விசாகன் | $ 200.00 |
| செல்வன் மனோகாந்தன் யாதவன் | $ 200.00 |
| திரு. விநாயகர் கந்தவனம் | $ 200.00 |
| திரு. கனகசபை கந்தையா | $ 200.00 |
| திரு. வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் | $ 200.00 |
| திருமதி இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| திரு. வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |
| திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் | $ 200.00 |
| திரு. நிமலகாந்தன் மிதுரன் | $ 200.00 |
| திரு. நிமலகாந்தன் மிகிரன் | $ 200.00 |
| திருமதி. கோகிலாம்பாள் கனகசபாபதி | $ 200.00 |
| திரு. ம. வரதகுமார் | $ 600.00 |
| திரு. சு. சிவபரமானந்தம் | $ 200.00 |
| திரு. செல்வா இராஜதுரை | $ 200.00 |
| திருமதி. அன்னபூரணம் ஞானசம்பந்தர் | $ 200.00 |
| செல்வன் யசாகன் ஈஸ்வரமூர்த்தி<br>செல்வி மாதங்கி ஈஸ்வரமூர்த்தி<br>செல்வன் வேலவன் ஈஸ்வரமூர்த்தி<br>செல்வன் முதல்வன் ஈஸ்வரமூர்த்தி | $400.00 |
| திருமதி தங்கமுத்து தம்பித்துரை | $200.00 |
| திரு. ஆறுமுகம் சரவணமுத்து | $200.00 |

தொடர்ச்சி -

உ

## எங்குமுள்ள பிள்ளையார்

### முல்லைத்தீவு
### உப்புமாவடிப் பிள்ளையார்

சமயத்தின் பெயராலே சண்டை செய்வார்
சாத்திரத்தைப் பூசிப்பார் சாதி பார்ப்பார்
நிமித்தத்தால் நியாயத்தை வீழ்த்தி நிற்பார்
நெஞ்சத்தை வஞ்சத்தால் நிறைத்து வைப்பார்
அமைதிக்கும் ஆணவத்தால் ஆப்பு வைப்பார்
அவர்யாரும் இல்லாத முல்லை மண்ணை
உமைபங்கர் பெற்றமுதற் பிள்ளை ஓம்ப
உப்புமா வடிதங்கி ஒளிர்கின் றாரே. (119)

### முல்லைத்தீவு
### செம்மலைப் பிள்ளையார்

பீடாரும் பதிமுல்லை பெற்ற பேறால்
பேரார்செம் மலைவாழும் பிள்ளை யாரே
கூடேதும் இல்லாத குருவி யில்லை
கொழுகொம்பில் லாதவோர் கொடியு மில்லை
காடேயும் விலங்குகளும் கவலை யின்றிக்
களைப்பாற இடமுண்டு கருதி நின்னை
வீடேதும் இல்லாதேன் விரைந்து வந்தேன்
வேதனைகள் தீர்த்தருள வேண்டு வேனே. (120)

### முல்லைத்தீவு – கோட்டகக்கேணி
### கைவெட்டிப் பிள்ளையார்

கைகட்டி வாய்பொத்திக் காலில் வீழும்
கடைகெட்ட வாழ்க்கையுடன் கழிய வேண்டின்
செய்திட்ட தீவினைகள் தீர வேண்டின்
தெய்வத்தைத் தெளிந்தருளில் திளைக்க வேண்டின்
பொய்விட்டுப் புடமிட்ட போதம் வேண்டின்
புகழ்முல்லைக் கோட்டகக் கேணி போற்றும்
கைவெட்டிப் பிள்ளையாரைச் சென்று கண்டு
கசிந்துநீர் சொரிந்துபூங் கழல்வீழ் வீரே. (121)

- வி. கந்தவனம்

# பிரார்த்தனையின் பலன்

"ஞானசுரபி, ஆத்மீகவள்ளல்" ஆத்மஜோதி ஆசிரியர்
நா. முத்தையா

கடவுள் ஒருவர் உண்டென்பது முக்காலமும் உண்மை. கடவுளை யாரும் அறிய முடியாது. ஆனால் எல்லாரும் அனுபவிக்கலாம். கடவுள் அறியப்படும் பொருள் அல்ல! அனுபவிக்கப்படும் பொருளாகும்.

ஒரு மாந்தோட்டம், அதில் நூற்றுக் கணக்கான வெவ்வேறு வகையான மாமரங்கள். அதனை ஒரு தாவர விஞ்ஞானி நன்கு ஆராய்ந்து மாமரத்தின் மகத்துவம் பற்றி நூல் ஒன்று எழுதினார். ஆனால் ஒரு பழத்தையேனும் சுவைத்தாரில்லை. பழங்களின் குணநலன்கள் பற்றி எழுதினார்.

அவருடைய வேலைக்காரனோ அந்த மரங்களின் பழங்களை ஒன்றுவிடாமல் சுவைத்தான். அவன்தான் அப்பழங்களின் சுவை பற்றி விஞ்ஞானிக்கு எடுத்துக் கூறினான். இது இனிப்பானது, புளிப்பானது, தோல் தடிப்பானது, தோல் மென்மையானது, விதை பெரியது, சிறியது இப்படியெல்லாம் வேலைக்காரன் சொன்ன விபரங்களை வைத்துப் புத்தகம் எழுதி விஞ்ஞானி பரிசு பெற்றார்.

ஆனால் பழத்தை அனுபவித்தது யார்? விஞ்ஞானியின் வேலைக்காரன். இதேபோல்தான் கடவுளை அனுபவிப்பதும் கல்விமான்களிடம் இல்லை. கல்வி அறிவில்லாதவர்கள் மனம் உருகிப் பிரார்த்தனை செய்து கடவுளை அனுபவிக்கிறார்கள். கற்றவர்கள் கடவுளின் நாமத்தை வாய் விட்டுக் கூறமாட்டார்கள். காரணம் அவர்களுடைய அகந்தை வாய்திறக்காமல் செய்துவிட்டது. சாமானிய மக்களைப் போன்று தாமும் வாய்திறந்து பாடினால் தங்களுடைய பட்டத்திற்கும் அந்தஸ்த்திற்கும் என்ன மதிப்புத்தான் உண்டு என்ற எண்ணம்.

இதனைத்தான் திருமூலர் "சிவசிவ என்கிலர் தீவினையாளர்" என்றார். "அரன்நாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே" என்பது சம்பந்தர் வாக்கு. இதனைப்பற்றி நீட்டி முழக்கிப் பேசுகிறவர்கள் கூட நாமசங்கீர்த்தனம் செய்வதில்லை. இதனால்தான் இவர்களுடைய பேச்சில் ரசனை போய்விட்டது.

ஒரு விஞ்ஞானி எட்டு நோபல் பரிசு பெற்றவர். ஒன்பதாவது பரிசும் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டார். கடவுளைப்பற்றி ஆராய்ந்து அதில் ஒரு நோபல் பரிசு பெற்றுவிட்டால்தான், தான்

*மனித தர்மங்களில் அடிப்படையான தர்மம் அன்பு*

உலகில் முதன்மை பெற்றவராகக் கணிப்பார்கள் என்பது அவருடைய நினைவு.

கடற்கரைக்குச் சென்றார். கடவுளைப்பற்றி எப்படி ஆராய்வது? எந்த இடத்தில் தொடங்குவது என்று தெரியாமல் தலையைப்போட்டு உடைத்துக் கொண்டார். திடீரென ஒரு காட்சி, ஒரு சிறிய பையன் ஒரு சிப்பியில் கடல் நீரை அள்ளுவதும் அதனைத் தூரத்திலே கொண்டு சென்று ஊற்றுவதுமாகக் காணப்பட்டான்.

விஞ்ஞானி பையனைக் கூப்பிட்டார். அவனோ இவரைக் கவனியாதவன் போல் தன் கருமமே கண்ணாகக் காணப்பட்டான். தம்பி இதனை எதற்காக செய்கிறாய் என்றார். இப்படி இராப்பகலாக இத்தண்ணீரை அள்ளி ஊற்றினால் கடல் ஒரு நாளைக்கு வற்றிவிடும். வற்றியபின் கடலில் இருக்கும் அத்தனை செல்வங்களையும் ஏழைகளுக்கு வாரிவழங்குவேன் என்று கூறினான்.

இது உன்னால் முடியுமா? என்று விஞ்ஞானி கேட்டுப் பெரிதாகச் சிரித்தார்.

ஏன் சிரிக்கிறீர்கள்? உமது சிறிய மனத்தினால் இந்தப் பெரிய கடவுளை அளக்க வந்திருக்கிறீர்களே! இது உங்களால் முடியுமா? இது முடியுமானால் எனது செயல் ஏன் வெற்றிபெற முடியாது என்று கேட்டதுதான் தாமதம் பையன் மறைந்துவிட்டான்.

இப்போதுதான் விஞ்ஞானி கடவுள் அறியப்படுகிற பொருள் அல்ல. அனுபவிக்கப்படுகிற பொருள் என்பதையும் இந்த அனுபவத்தை, தான் அனுபவிக்கலாமே தவிர எழுத்தில் வடிக்க முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டார். இதனைச் சம்பந்தர்.

"ஏதுக்களாலும் எடுத்த பொருளாலும்
மிக்கச் சோதிக்க வேண்டாம்
சுடர்விட்டுளன் எங்கள் சோதி"

என்று கூறுகின்றார்.

எங்கள் சைவத்தில் அனுபவித்து உணரவேண்டியன ஆயிரம் உண்டு. இதனை உணராமல் அநேகர் மதம் மாறுகிறார்கள். மதம் மாறுமாறு கேட்கின்றார்கள். இவர்கள் இருபகுதியாருக்கும் தம் மதத்தைப்பற்றியோ புதிய மதத்தைப் பற்றியோ எதுவுமே தெரியாது. இவர்கள் வால் அறுந்த நரியைப் போன்றவர்கள்.

ஒரு நரி நாட்டுக்குச் சென்றது. காட்டில் செய்த

குள்ளத்தனத்தை நாட்டிலும் காட்டியது. ஒரு குடியானவன் அதன் வாலை அறுத்துவிட்டான். வால் அறுந்த நரியை மற்ற நரிகள் சேர்த்துக் கொள்ளவில்லை. இது தனியாகச் சென்று வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே கடவுளே! கடவுளே என்று ஊளை இட்டது. மற்றைய நரிகள் எல்லாம் ஓடிவந்து கடவுள் எங்கே இருக்கிறார்? எங்கள் கண்களுக்குத் தெரியவில்லையே என்று கேட்டன.

அதற்கு அந்தப் பொல்லாத நரி உங்களுக்கெல்லாம் வால் இருப்பதால் கடவுளைத் தெரியவில்லை என்றது. ஒரு நரி சென்று வாலை அறுத்துக் கொண்டது. ஆனால் அதற்கும் கடவுள் தெரியவில்லை, தெரியவில்லை என்று சொன்னால் தன்னை மற்றைய நரிகள் சேர்த்துக் கொள்ள மாட்டா என்பது தெரியும். எல்லா நரியும் பொய் சொல்லிச்சொல்லியே தங்கள் வாலை அறுத்துக் கொண்டன.

இதே போன்றுதான் கிறிஸ்து சமயத்தில் ஏதோ ஒரு சுயநலத்திற்காக சேர்ந்து கொண்ட ஒவ்வொருவரும் நரிகளைப் போல பொய்யான காரணங்களைக் காட்டிப் பொதுமக்களை ஏமாற்றி வருகின்றார்கள்.

சமய குரவர்கள் நால்வரும் பிரார்த்தனை செய்தே பல அற்புதங்களை இறையருளால் நிகழ்த்தியவர்கள். இவர்களுக்கு இறைவன் அருள்புரிந்ததுபோல இப்பொழுது நிகழ்வதில்லையே என்று சிலர் ஏங்குகின்றனர். அன்று போல இன்றும் உண்டு என்பதற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்களைக் கூறமுடியும்.

அமெரிக்கா அனுப்பிய அப்பலோ 11. சந்திரமண்டலத்திலிருந்து திரும்பும்போது இயந்திரக் கோளாறு ஏற்படடு நிலைகுலைந்து ஆகாய வெளியில் ஓடத்தொடங்கியது. இதனை எவராலும் சீர்செய்ய முடியவில்லை.

அப்பலோவில் இருந்து கடைசியாக ஒரு செய்தி அமெரிக்க மக்களுக்கும் உலக மக்களுக்கும் அனுப்பப்பட்டது. எமது முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்துவிட்டன. கடைசி முயற்சி கடவுளைப் பிரார்த்திப்பது தான் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். அமெரிக்க மக்கள் எல்லோரும் அதனை உணர்ந்தார்கள். மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்தார்கள். அப்பலோ எவருடைய உதவியுமின்றி உரிய இடத்தில் உரிய நேரத்தில் வந்து இறங்கியது. இச்செய்தியை அமெரிக்க மக்கள் இன்றும் உணருகின்றார்கள்.

நியூயோர்க்கில் வால்டர்ரீடு மருத்துவ மனையில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் மார்பில் ஒரு கட்டியோடு நோயாளி ஒருவர் வந்து சேர்ந்தார்கள். வைத்திய பரிசோதனை செய்யப்பட்டது. அது இனிமேல் மாற்றமுடியாத அளவிற்கு பெரிதாகி இருந்தது. அம்மையார் ஆறு வாரங்களுக்குக்கூட உயிர்வாழமாட்டார் என்பது வைத்தியரின் முடிவு. இதனை அம்மையாரிடம் வைத்தியர் கூறவில்லை. அம்மா கட்டி நன்றாகப் பழுக்கவில்லை. ஆறுமாதம் கழித்து வாருங்கள் என்று அனுப்பினார்.

ஆறு மாத முடிவில் அம்மையார் வைத்தியர் முன்நின்றார். அம்மையாரை அடையாளங்கண்டு கொள்ள முடியவில்லை. உங்களுக்குப் புற்றுநோய் எங்கே இருக்கிறது என்று கேட்டார் வைத்தியர். ஆறுமாதங்களுக்கு முன் நீங்கள்தான் அந்த நோய் பற்றி குறிப்பிட்டீர்கள். ஆறுமாதம் கழித்து வருமாறு கூறினீர்கள். சரியாக ஆறுமாதம் கழித்து வந்திருக்கிறேன் என்று அம்மையார் கூறினார்.

இப்பொழுது தான் வைத்தியருக்குப் பழைய நினைவு நிழலிட்டது. அம்மையாரைப் பலமுறை சோதித்தார். கட்டி இருந்த அடையாளம் கூடக் காணப்படவில்லை. என்ன மருந்து சாப்பிட்டீர்கள்? யார் அந்த மருந்தைக் தந்தவர். என்றெல்லாம் கேள்விக்கு மேல் கேள்வியாக வைத்தியர் கேட்டார்.

அம்மையார் சிரித்தார் தினமும் ஒரு மணித்தியாலம்வரை மனம் உருகிக் கண்ணீர்வார பிரார்த்தனை செய்தேன் எந்த மருந்தும் உட்கொள்ளவில்லை என்றார் அம்மையார்.

அம்மா! நீங்கள் வழக்கம் போலச் செய்த பிரார்த்தனையை இப்போதும் செய்யுங்கள். அந்த நேரத்தில் உங்கள் உடம்பைப் பரிசோதனை செய்யவேண்டும் என்றார் வைத்தியர். அம்மையார் பிரார்த்தனையில் ஊறிப்பழுத்தவர் ஆனபடியினால் சிறிது நேரத்தில் பிரார்த்தனையின் உச்சநிலைக்குச் சென்றுவிட்டார். அந்த நேரத்தில் அம்மையாரின் உடலில் இருந்து ஒரு துளி இரத்தம் எடுத்துக் கொண்டார். சாதாரண நிலையிலும் ஒரு துளி இரத்தம் எடுத்துக் கொண்டார். இரண்டையும் பரிசோதித்தார். சாதாரணநிலையில் எடுக்கப்பட்ட இரத்தத்திலும் பார்க்க பிரார்த்தனையில் எடுக்கப்பட்ட இரத்தத்தில் சில நுண்பொருள்கள் காணப்பட்டது' அது ஏன் என்று மாத்திரம் அவரால் கூறமுடியவில்லை. அந்த அம்மையாரின் புற்றுநோயை அவருடைய பிரார்த்தனையே படிப் படியாக மாற்றியது

என்பது பற்றி வைத்தியரிடமிருந்து வைத்திய அறிக்கை ஒன்று வெளியானது.

இரத்த அழுத்தம் அதிகம் உள்ளவர்கள் ஆழ்நிலைத் தியானத்தினால் இரத்த அமுக்கமே இல்லை எனும் சொல்லும்படி வாழ்கிறார்கள். இதற்கு உதாரணம் ஆயிரக்கணக்கில் கூறலாம். இதிலிருந்து நாம் அறியவேண்டியது என்ன? வைத்தியரின் சோதனை அறிவியல்! அம்மையாரின் தியானம் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி.

அறிவியல் எல்லைக்கு அப்பாற்பட்டு அறுதியாகச் செயற்படும் சக்திகள் பல உள்ளன என்பதற்கு அறிவியல் எல்லைகளுக்கு உட்பட்டு நமக்கு நிரூபணம் ஆகியுள்ள ஓர் உண்மைச் சம்பவம் இது. படிப்பு அறிவியலுக்குத் திறவுகோல் என்றால் பிரார்த்தனை மெய்ஞானத்திற்குத் திறவுகோலாகும்.

ஆகவே பிரார்த்தனை நாள்தோறும் தவறாது செய்யுங்கள். இரவு உணவுக்குமுன் குடும்பத்திலுள்ள அத்தனைபேரும் வீட்டில் ஒன்றுகூடி பிரார்த்தனை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இதுவே உங்கள் சமய சாதனைகளுக்கெல்லாம் வழிகாட்டியாக அமையும் என்று துணிந்து கூறலாம்.

**தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள்**
**சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு**
**வாரி வழங்குங்கள்**

**ஆதீன விலாசம்:**

தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245



அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!

# ஆறுமுகநாவலர் அவர்கள்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

ஆறுமுகநாவலர் மறைந்து தொண்ணூறாம் ஆண்டு வரப்போகின்றது. வருகிற ஆண்டு தொண்ணூறாம் ஆண்டு. நாவலர் அவர்கள் மறைந்தபின் வந்துபோன ஆண்டுகளுக்குள் எல்லாம், தலைசிறந்த ஆண்டு இந்த 1968-ஆம் ஆண்டு. இந்த ஆண்டில், நாவலர் அவர்களின் அருமை பெருமைகள், பெரிதும் சிந்திக்கப்படுகின்றன. 'நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்' என்பது பழமொழி.

சைவர்கள் நாவலர் அவர்களை, ஐந்தாம் குரவர் என்று பாராட்டி, இதுகாறும் விழா எடுத்து வந்தார்கள். இப்பொழுது தமிழர்கள், தமிழர் அல்லாதவர்கள், இத்தேசத்தவர்கள், இத்தேசத்தவர்கள் அல்லாதவர்கள் யாவரும் ஏகோபித்துக் கொண்டாடும் நிலை தோன்றியிருக்கின்றது.

நாவலர் அவர்களை வெண்கலச் சிலை உருவில் தரிசிப்பதற்குக் கால்கோள் இந்த ஆண்டில் நடந்திருக்கின்றது. வருகிற ஆண்டில் நாவலர் சிலை நிறுவப்பட்டு, பெரியதொரு கொண்டாட்டம் நிகழ்த்தப்படும். அதன் காரணம் சிந்திக்கற் பாலது.

மகாத்மா காந்தியடிகளை உலகம் முழுவதும் கொண்டாடுகிறது. மகாத்மா சத்தியம், அகிம்சை என்ற தர்மங்களைப் பயன்படுத்தி வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்த மகான்.

'சத்தியம்' 'அகிம்சை' என்ற இருதர்மங்களையும் ஒருங்கு திரட்டி, இரண்டெழுத்தாலான ஒரு சிறிய வார்த்தையினாலே சொல்லிவிடலாம். அந்த வார்த்தை தான் 'நீதி' என்ற வார்த்தை. அது கூரிய வாள் நுனியிலும் நுண்ணியது. அதனை 'அக்கினி யாற்றிலிட்ட மயிர்ப்பாலம்' என்றும் வர்ணிக்கலாம். அப்படிப்பட்ட நீதியில் தம் வாழ்க்கையை நடத்தியவர் நாவலர் பெருமான்.

'நீதி வழுவா நெறிமுறையில் இட்டார் பெரியோர்' என்பது தமிழ் அன்னையின் வாக்கு. அவ்வாக்கில் 'இட்டார்' என்பதற்கு பொருள், நீதி நெறியில் தம் வாழ்க்கையை வைத்துக் கொண்டவர் என்பதாம்.

மகாத்மாகாந்தி, நீதியிலிருந்து விலகினால் தமது மனைவியையும் விலக்குவதற்கு ஆயத்தமாயிருந்தார். அவ்வாறாய ஆயத்தத்தில் எத்துணையும் குறைந்தவரல்லர் நாவலர்.

நாவலர், இந்த உலகத்தில், மிக்க பற்று வைத்த ஒரு மனிதர் இருந்தால், அந்த மனிதர் அவர் மருகரும் மாணாக்கருமான, வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளையேயாம். இலக்கிய இரசனையில், பொன்னம்பலபிள்ளைக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்றே கூறலாம். பொன்னம்பலபிள்ளை அபர கம்பர். கைம்மாறு கருதாது எந்த நேரத்திலும் மாணவருக்குப் பாடம் சொல்லிக் கொண்டேயிருப்பார்.

கொத்தமங்கலம் சுப்புவின், 'குயிலியை' ஏழைக் கூட்டமொன்று மொய்த்துக் கொண்டிருப்பது போல, வித்துவக் கூட்டமொன்று, எப்பொழுதும் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையை. மொய்த்தபடியிருக்கும். இப்படிப்பட்ட பொன்னம்பலபிள்ளையிடம் நாவலர் அவர்களுக்குப் பற்று உண்டானதில் நூதனமில்லை.

ஒரு முறை தமது பற்றுக்குப் பாத்திரமான பொன்னம்பல பிள்ளை, நீதியிலிருந்து விலகியபோது அதனை நீதித்தலத்தில், தெட்டத் தெளிய எடுத்துச் சொன்னார் நாவலர்' கண்ணீர் விட்டுக் கொண்டே சொன்னார். அதனாலே, தம்முடைய அருமை மருமகனை ஐந்து வருடச் சிறைவாசஞ் செய்ய வைத்தார் நாவலர் பெருமான்.

அப்பொழுது கற்றோரும் மற்றோருமான ஆயிரக்கணக்கான வர்களின் கண்கள் கலங்கின. வித்துவசிரோமணியின் கண்களிலிருந்தும் நீர் துளித்தது. தமது சிறைவாசத்துக்கு அஞ்சித் துளித்த துளியன்று அத்துளி. தமது அருமை மாமனாரின் நீதிவழுவா நெறிமுறையைக் கண்டு உருகித் துளித்த துளியேயாகும் அத்துளி.

வித்துவசிரோமணி, அன்றுவிட்ட கண்ணீர்த் துளியின் அருமையை அன்று அக்கட்டத்தில் எத்தனைபேர் அறிந்திருக்கக் கூடுமோ?

மகாத்மா காந்தியை ஓர் இந்துவே சுட்டுக் கொன்றான். நாவலர், தமக்குப்பகைவர் தம்மவராகிய தமது சமயத்தவரே என்கின்றார்.

"பூர்வ காலத்திலே சைவசமய விருத்தியின் பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சைவசமயிகளாலே நன்கு மதிப்பும், பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமய விருத்தியின் பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சைவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவும் இல்லை, என்னை அவமதிக்கவும் இல்லை" என்கிறார் நாவலர்.

நீதியே சமயத்தின் ஆணிவேர். நீதிநெறியில் நடந்தவர்கள்

---

*கலாச்சாரமே நல்லொழுக்கத்தை நமக்குப் போதிக்கிறது.*

எச்சமயத்தினரேயாயினும் அவர்களைப் பாராட்ட நாவலர் எட்டுணையுந் தவறியதில்லை. ஒருமுறை ஏழைகளுக்கிரங்கிய கத்தோலிக்கர்களை எல்லை கடந்து பாராட்டினார் நாவலர்.

எச்சமயத்தையும் நிந்தியாத ஒரு சமயம் இருந்தால், அது சைவசமயமேயாம். எல்லாச் சமயமும் இருப்பது நீதி தான் என்று சொல்லும் சமயம் சைவசமயம். ஒவ்வொருவரும் தத்தம் சமயத்தை அறிந்து, அச்சமய நெறிவழி ஒழுகுவதே முறையென்று சொல்லும் சமயம் சைவசமயம். ஒருவனை, அவன் தன் சமயநெறியில் ஒழுகவிடாது தடுப்பதைச் சைவசமயம் ஒப்புக் கொள்வதில்லை.

'ஓதுசமயம்' என்ற, சித்தியார்பாட்டில், நீதியினால் இவையனைத்தும் ஓரிடத்தே காண நின்றது யாது, அது சமயம்' என்ற தொடரின் பொருளை 'செப்பரிய' என்ற தாயுமானவர் பாடல், 'இப்பரிசாம் சமயமுமாய் அல்லவாகி' என்ற தொடரால் விளக்கஞ் செய்கின்றது. குறிப்பிட்ட இருபாடல்களையுஞ் சிந்திப்பவர்கள், மேன்மைகொள் சைவநீதியின் பெருமையை உணர்வர்.

பார்சிவற் பாதிரியார், மேன்மை பொருந்திய சைவநீதியை, நாவலர்பாற் கண்டார் கண்டமாத்திரமே, சற்றுந் தயங்காமல் நாவலரை 'மமகுரு' என்று துதித்தார். 'மம' என்பது சம்ஸ்கிருத வார்த்தை' எனது என்பது அதன் பொருள். நாவலரை எனது குரு என்றார் பார்சிவல். பார்சிவலின் நீதியைக் கண்ட நாவலர் அவர் பெயரைக் கூறும் போதெல்லாம், பார்சிவல் துரை என்றே கூறுவார். நீதியை நீதி மதித்தது.

பார்சிவல், பைபிளை நல்ல தமிழில் திருத்தித் தரும்படி கேட்டபோது, நாவலர் சற்றேனுந் தயங்கியதில்லை, திருத்திக் கொடுத்தார். அதே சமயத்தில் நீதியிற் பிறழ்ந்து, மதமாற்றம் நடப்பதைக் காணுந் தோறும், பெரியதொரு எரிமலையாய் வெடித்தார் நாவலர்.

அன்றூஸ் பாதிரியாருக்கும் மகாத்மா காந்திக்கும் இருந்த தொடர்பு, பார்சிவல் பாதிரியாருக்கும் நாவலருக்கும் இருந்து வந்தது.

மகாத்மா காந்தியடிகளின் சீர்திருத்தம், மலகூடத்தைச் சுத்தஞ் செய்வதிலிருந்து தேசவிடுதலை பரியந்தம் எல்லாத் துறைகளிலும் பரவியது.

நாவலர் தாம் சிரமேற் கொண்ட நீதியை ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தல் தொடக்கம் இலங்கைப் பிரதிநிதித் தெரிவுவரை பரவச் செய்தார். அதனாலே, இன்று, உலகம் பாகுபாடு காட்டாமல்

நாவலரை மதிக்க முன்வந்திருக்கின்றது. நாவலர் சிலைக்குப் பெருநிதிகள் வந்து குவிகின்றன. நாவலர் நோக்கங்களை ஆராய்ந்து பெரிய திட்டங்களும் வகுக்கப்படுகின்றன.

நாவலர் பெருமான் வகுத்த திட்டங்களுள், சிறந்ததொரு திட்டம், ஐந்தாண்டுத்திட்டம். அத்திட்டத்தை இச்சந்தர்பத்தில் ஆராய்வது பயன்தருவதொன்றாயிருக்கும்.

நாவலர் அவர்களின் ஐந்தாண்டுத் திட்டத்தைக், கற்பனைத்திட்டம் என்றே சொல்ல வேண்டும். அத்திட்டம் நாவலர் கருதியவாறு நிறைவேறி நடந்ததில்லை; நடவாமலிருக்கவுமில்லை. அப்படியான திட்டத்தினாலேதான், ஒரு சமூகமோ, சமயமோ முன்னேற முடியும்.

நாவலர் வகுத்த ஐந்தாண்டுத்திட்டம் பின்வருமாறு:- நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும் இடையறாமுயற்சியும், ஆரோக்கியமும் உடைய, இருபது வளர்ந்த பிள்ளைகள் பரீட்சை செய்து வருடந்தோறும் தேர்ந்தெடுக்கப்படுவர். பிறப்புப் பத்திரத்துக்குப் பதிலாக அவரவர் சாதகமும் பார்க்கப்படலாம் போலும். உயர்வாகிய கருவி நூல்களும், சமயசாத்திரங்களும் ஐந்து வருடகாலம் கற்பிக்கப்படும். ஐந்து வருடத்தில், நூறு மாணவர், இருபதின்மர் கொண்ட ஐந்து வகுப்பினராய், நாவலர் கலைக்கழகத்திலே இருப்பர். வருடந்தோறும் ஐந்து வருடப்பயிற்சி பூர்த்தியான, இருபதின்மர் வெளியேற, வேறு புதியவர் இருபதின்மர், பரீட்சை செய்து சேர்க்கப்படுவர். (தொடரும்)


**ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை நடாத்தும்**

# திருமுறை விழா - 2013

**இடம்: கனடா கந்தசுவமி கோயில் மண்டபம்**
**733 BIRCHMOUNT ROAD, SCARBOROUGH**

**காலம்: 22-09-2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி தொடக்கம் மாலை வரை**

**விழாவை முன்னிட்டு நடத்தப்படும் திருமுறை மனனப்போட்டி விபரங்களை வாரம் தோறும் உதயன் பத்திரிகையில் பார்த்தறியவும்.**

# பெருமான் செய்த பிழை

**சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்**

உயிர்களுக்கு நன்மையே செய்பவன் சிவபெருமான். அவன் குறை எதுவும் இல்லாத நிறைவான பொருளாக இருக்கிறான். *'குறையிலா நிறைவே'* என்று திருவாசகம் போற்றுகின்றது. ஆயினும் அவன் நன்மை செய்தாலும் பிழையும் செய்கிறான் என்றும் திருவாசகம் கூறுவதைக் காணலாம். குழைத்தபத்தில் உள்ள ***'நன்றே செய்வாய் பிழை செய்வாய்'*** என்னும் தொடர் இது தொடர்பானது. அவன் பிழை செய்ததுண்டா ?

இறைவன் பிழை செய்ததை சுந்தரர் சம்பந்தர் ஆகியோர் வாழ்விலிருந்து அறியமுடிகிறது. குறைகள் நீங்கி நிறைவான வாழ்வில் திருக்கைலாயத்தில் இருந்தவர் சுந்தரர் பெருமான். அங்கே சிவனையன்றி வேறெந்த நினைவுமின்றி சிவப்பணியில் நிலைத்து நின்றவர் அவர். அனிந்திதை, கமலினி என்ற இரு கன்னியர் அங்கு சுந்தரர் கண்ணில் தென்பட்டனர். அவர்கள் அழகில் மயங்கிய அவர் ஒரு பொழுது சிவனை மறந்து நின்றார். சிவன் அதனைக் குற்றமாகக் கொண்டு சுந்தரரை மண்ணுலகில் வாழப் பணித்தார்.

சிவபதம் அடைந்திருந்த சுந்தரரின் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் சிவனைப் பற்றியனவாகவே இருந்தன. இந்த நிலையில் அவர் தானாகவே தனது மனத்தை கன்னியர் மேல் போக்கினார் எனக் கூறமுடியாது. அது சிவனின் செயலாகவே கருதவேண்டி உள்ளது. சிவனே பிழையான இச்செயலுக்குச் சுந்தரரை ஆளாக்கியபின் மண்ணுலகுக்கு அவரை அனுப்பித் தண்டித்துள்ளான். இது சிவன் செய்த பிழையான செயல்.

இறைசெயல் எப்பொழுதும் காரணமின்றி நடைபெறுவதில்லை. சுந்தரரைக் கன்னியர் மேல் மையல் கொள்ள வைத்ததற்கும் காரணம் உண்டு. தென்தமிழ் நாடு பொலிவிழந்து தேய்ந்திருந்ததும் அது மீண்டும் பண்டைப் பெருமையுடன் பொலிவுற்று வாழவேண்டும், இதற்கு சிவனடியார் பெருமையை உணர்ந்து மக்கள் பயனுள்ள நல்வாழ்வு

---

*தெய்வத்தின் விருப்பப்படியே இந்த உலகம் நடக்கிறது*

*உண்மையான கல்வி பெறுவது இரண்டாவது பிறப்பைப் போன்றது.*

வாழவேண்டும் என்று அதற்குத் துணைநிற்கும் திருத்தொண்டத் தொகையைச் சுந்தரர் அருளிச் செய்தார். சேக்கிழார் பெருமானின் பின்வரும் பாடல் இதனை உணர்த்துகிறது.

> ***'மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட***
> ***தீதி லாத்திருத் தொண்டத் தொகைதர***
> ***போது வாரவர் மேல்மனம் போக்கிட***
> ***காதல் மாதரும் காட்சியில் நண்ணினார்'.***

சுந்தரர் எதிரில் கன்னியர் வந்ததும், அவர்கள் அழகைக் கண்டு அவர் மயங்கியதும், மண்ணுலகில் பிறந்ததும் சிவனருளால் நேர்ந்தவை. அவன் செயலே அவற்றுக்குக் காரணமாக அமைந்தது.

இது போன்ற பிழையான செயலை திருஞானசம்பந்தர் வாழ்விலும் இறைவன் செய்துள்ளான். சிவனடியையே சிந்தை செய்து கொண்டு சிவலோகத்தில் வாழ்ந்த தன்னை மயக்கி மண்ணுலகிற்கு அனுப்பியவன் இறைவனே என்று சம்பந்தரே சொல்கிறார். ***'(உனது) திருவடி மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து மண்ணில்மேல் பிறக்குமாறு காட்டினாய்'*** என்பது அவரின் திருவாக்கு. இங்கும் இறைவன் செய்தது பிழையாகத் தெரிந்தாலும், உலகநன்மை கருதியே அவன் இதனைச் செய்தான் எனக் கொள்ள வேண்டியுள்ளது. சேக்கிழார் பெருமான் தனது திருத்தொண்டர் புராணத்தில் இதனை விளக்கியுள்ளார். தென்தமிழ் நாடும் செந்தமிழ் மொழியும் சீர்பெற்றுச் சிறக்கவும், திருநீற்று நெறி விளங்கவும், பொய்ச்சமயங்கள் பாழ்பட்டு சைவம் நிலைக்கவும், இவைபோன்ற பிற காரணங்களுக்காகவும் சம்பந்தர் பிறந்து மூன்று வயதில் அழுததாகக் கூறுகிறார்.

சுந்தரரும் சம்பந்தரும் மண்ணுலகத்தில் அவதாரம் செய்ததால் உலகம் நன்மையடைந்தது. அது சிவன் செயலால் நேர்ந்தது. ஆயினும் வினைத் தொடர்பின்றி இருந்த அவர்களை மயக்கி, வினை புரியப் பண்ணி, உலகில் பிறக்க வைத்தது இறைவன் செய்த பிழையே. உலகில் பிறக்க வைத்தபின், அவர்கள் செய்யும் பிழைகளுக்கு இறைவன் உடந்தையாக இருந்துள்ளான். கட்டிய மனைவி பரவைநாச்சியார் இருக்க, சங்கிலியை மணக்க விரும்பிய

---

*ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரி வரையில் ஆத்மீகக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.*

சுந்தரருக்கு உதவியுள்ளான். தான் செய்த பிழைகளுக்கு பெருமானே உதவியுள்ளதாக சுந்தரர் கூறுகிறார். அவரின் திருவாரூர் பதிகத்தில் ***'யான் செய்த துரிசுகளுக்கு உடனாகி'*** அவன் இருந்தான் எனக் குறிப்பிடப்படுகிறது.

சிவனால் ஆட்கொள்ளப் பட்டு தம்மை முழுதாக அவனுக்கு அர்ப்பணித்தவர்கள் திருத்தொண்டர்கள். சிவனருளில் தோய்ந்த இத்திருத்தொண்டர்களின் சிந்தனை, சொல், செயல் எல்லாமே சிவனுடையதாக இருக்கும். ஆகவே அவர்கள் பிழை விட்டால் அதற்கு இறைவனே காரணம் எனக் கருதவேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனால் ஆட்கொண்டபின் தன்னிலை மறந்து எல்லாம் சிவம் என வாழந்தவர். இந்த நிலையில, இறைவனைப் பார்த்து 'நீ என்னை ஆட்கொண்ட பொழுதே எனது உயிர், உடல், உடைமை அனைத்தையும் உனதாகக் கொண்டு விட்டாய். இன்று நீ (என்மூலம்) நல்லதும் செய்வாய், பிழையும் செய்வாய், அதற்கு நான் பொறுப்பல்ல', எனக்கூறுவது கருதற்பாலது.

***அன்றே என்றன் ஆவியும் உடலும்***
***உடைமை எல்லாம்***
***குன்றே அனையாய் என்னையாட்***
***கொண்ட போதே கொண்டிலையோ***
***இன்றோர் இடையூ றெனக்குண்டோ***
***எண்தோள் முக்கண் எம்மானே***
***நன்றே செய்வாய் பிழைசெய்வாய்***
***நானோ இதற்கு நாயகமே.***

இறைநிலை அடைந்த அடியார்கள் எதிலும் இறைவனைக் காண்பார்கள். நல்லது தீயது, குணம் குற்றம் அனைத்திலும் சிவனைக் காண்பது அவர்களின் இயல்பு. இதனாலேயே ஞானசம்பந்தர் 'குற்றம் நீ குணங்கள் நீ' என்று பாடுகிறார். நாவுக்கரசர் 'பெருநலமும் குற்றமும்' ஆக நின்றாய் எனக் கூறுகிறார். அவன் செய்யும் நன்றும் பிழையும் உயிர்களினதும் உலகினதும் நன்மைக்கே என்பதை அருளாளர் வாழ்வும் வாக்கும் உணர்த்துகின்றன.

---

*மனித சமுதாயத்தின் பண்பை உருவாக்குவதில் உணவுக்கு முக்கிய பங்குண்டு.*

*பிறரிடம் அன்பும் சகிப்புத் தன்மையும் காட்டவேண்டுமே அன்றி பழிவாங்கும் போக்குக் கூடாது.*

# நினைமின் மனனே! நினைமின் மனனே!

பேரறிஞர் முருகவே பரமநாதன்

## சென்ற இதழ் தொடர்ச்சி

காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பது பழமொழி. வேளையிலே நம் தொழிலை முடித்துக் கொள்வோம் வெயிலுள்ள போதினிலே உலர்த்திக் கொள்வோம் எனப் பாரதியும் படித்திடித்துச் சொன்னான். எனவே இம் மனித ஜென்மம் கிடைத்த போதே அதைப்பயன்படுத்தி மனிதத்தனங்களை வளர்த்தெடுத்து மானிடயாக்கையின் பயனை அடைவது நம் கருமமும் தர்மமும் ஆகும். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ யாரறிவார். இதனாற்றான் அப்பர் பெருமானும் நெஞ்சே! நீ வா இறைவனை நிலைபெறுமாறெண்ணுதியேல் என அறிவுறுத்தினார். எனவே பட்டினத்தார் கானல்நீர் போலவும், சுழலும் காற்றாடி போலவும் அமைந்த - நிலைபரம் இல்லாத உலகியல் வாழ்க்கையையும் உடம்பையும் நித்தியமல்லாததென்று நினைத்து வாழ்வை மேற்கொள்வாயாக என்கிறார்.

அலகைத் தேரினலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலை யோம்பற்க

அலகைபேய், அலமருதல் - (சுழன்று) துன்பப்படுதல் எனவே எமக்கு என்ன நிகழ்கின்றது என்பதையும் ஓர்ந்து பார்க்க வேண்டும்.

பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறக்கும் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும் மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தினமலமாம் புனைந்தன அழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன உவப்பாம்
என்றிவை அனைத்தும் உணர்ந்தனை அன்றியும்

பிறந்த உயிர்கள் யாவும் இறக்கும் அப்படி இறந்த உயிர்கள் யாவும் மீண்டும் பிறக்கும் நாமரூபத்தோடு தோன்றிய பொருள்கள் ஒடுங்கும், ஒடுங்கிய பொருள்கள் மீண்டும் நாமரூபத்தோடு தோன்றும்.

---

*ஆயுதங்களைவிட தீய கருத்துக்களே இக்காலத்தில் பயங்கரமாகவுள்ளன.*

பெருத்த பொருள்கள் சிறுக்கும், சிறுத்த பொருள்கள் பெருகும். தெரிந்தன யாவும் மறந்துபோம், மறந்தன வெல்லாம் உணர்வில் வரும், கூடினவை பிரிந்துபோம், பிரிந்தவை மீண்டுங்கூடும். உண்டன எல்லாம் மலமாக மாறும் தரித்தன எல்லாம் அழுக்கடையும், விரும்பியவை வெறுக்கப்படும் வெறுக்கப்படுபவை விரும்பப்படும். என்று இவை எல்லாவற்றையும் அறிந்து கொண்டனை அல்லாமலும்

பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்
கொன்றனை யனைத்தும் அனைத்தும் நினைத்தின்றன
பெற்றனை அனைத்தும் அனைத்துநினைப் பெற்றன
ஓம்பினை அனைத்தும் அனைத்து நினைஓம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத்து அழுங்கினை
சுவர்க்கத்து இருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமும் இருநிலத்தருந்தினை
ஒன்றொன்று ஒழியா துற்றனை அன்றியும்

நீயெடுத்த அளவற்ற பிறவிகள் தோறும் பலவிதமான உயிர்களைக் கொன்றாய் அவைகளும் உன்னைக் கொன்றன, அவ்வுயிர்களை நீ அருந்தினாய், அவைகளும் உன்னை உண்டன எல்லாவற்றையும் நீ ஈன்றாய் அவைகளும் உன்னை ஈன்றன யாவற்றையும் நீ வளர்த்தாய், அவைகளும் உன்னை வளர்த்தன, செல்வம் வந்துற்ற காலத்து இன்பம் அடைந்தாய், வறுமை வந்து சேர்ந்தபோது துன்பப்பட்டாய், தெய்வ லோகத்தில் இருந்தாய், நரகத்திலும் கிடந்தாய், இப்பரந்த உலகத்தில் சுகத்தையும் அனுபவித்தாய் இங்கே சொன்னவற்றில் ஒவ்வொன்றினையும் விட்டுவிலகாது ஒவ்வொன்றையும் அடைந்து அனுபவித்தாய் மேலும்

புற்புதக்குரம்பை துச்சில் ஒதுக்கிடம்
என்னநின்றியங்கு மிருவினைக்கூட்டைக்
கல்லினும்வலிதாக் கருதினை இதனுள்
நீர்க்குமிழி போன்ற நிலையில்லாத சிறுகுடிசை போலவும், அருவருக்கத்தக்க ஒதுக்கிடம் போலவும் அமைந்து நடமாடும் இவ்வுடம்பாகிய கூட்டை, அதுவும் நல்வினை தீவினையால் ஆன உடம்பை, கல்லைப் பார்க்கிலும் வன்மையானதாக எண்ணினாய்.

---

*சில சமயங்களில் வாய் திறந்து பேசுவதைவிட பேசாமல் இருப்பத மிக்க பயனளிப்பதாகும்.*

இவ்வுடம்பு எப்படியானது என ஒருமுறை சிந்தித்துப்பார்.
பீளையும் நீரும் புறப்படும் ஒரு பொறி
சளியு நீரும் தவழும் ஒரு பொறி
உமிழ்நீர் கோழை ஒழுகும் ஒருபொறி
வளியும் மலமும் வழங்கும் ஒருவழி
சலமுஞ் சீயும் சரியும் ஒருவழி
உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை உள்ளூறத் தேர்ந்து

ஒரு பொறியாகிய கண்ணிற் பீளையும் நீரும் வெளிப்படும். காதில் குறும்பி வெளிப்படும். மூக்கில் சளியும் நீரும் கசியும், வாயில் எச்சிலும் கோழையும் சிந்தும். குதத்தில் அபான வாயுவும் மலமும் வெளிவரும். குறியில் நீரும் சீயும் ஒழுகும். இப்படி கெட்டமணம் உள்ளே துவங்கி யாவரும் காண வெளியே வந்து மணக்கும். இப்படியான உடம்பு இறுதியில் என்ன ஆகிறது சுடப்பட்ட எலும்பாகிறது. எனவே இவ்வாழ்வை ஆராய்ந்து சிந்தித்து தெளிந்து இறைவனையே சிந்தித்து நற்கதியடைவாய் எனப் பட்டினத்தடிகள் தன் மனத்திற்குப் புத்தி புகட்டுகிறார் இவர் திருவாக்குகள் எம்மையும் சீண்ட வேண்டுமன்றோ!

கடிமலர்க்கொன்றைச் சடைமுடிக்கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போக வின்பத்தை நிழலெனக்
கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற விருவினை மலமற
வரவொடு செலவுற மருளற விருளற
இரவொடு பகலற விகபர மற வொரு
முதல்வனைத் தில்லையுண் முனைத்தெழுஞ்சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினில் அரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற்றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொன்னம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!

---

*அறிவு நூல்கள் அனைத்தையும் கரைத்துக் குடித்திருந்தாலும் ஆத்மஞானம் இல்லாவிட்டால் அனைத்தும் வீண்.*

*எல்லாவிதமான செல்வங்களுக்கும் அறிவுதான் வேர்.*

வாசனை பொருந்திய கொன்றை மாலை தரித்த சடாமுடியுடைய பரம்பொருளை, நீங்குதல் இல்லாத சிவயோகப் பேரானந்தத்தை, நிழலைப்போல நீங்காத தன்மையுடன் பொருந்தி, எனது என்னும் பற்றுஅற, நினைவுகெட, இருவினைக்கு ஏதுவாக உள்ள மலம் அழிய, பிறப்பு இறப்பு ஒழிய, மயக்கம் ஓட, ஆணவம் நசிக்க, இரவு பகல் இல்லாமற்போக, இம்மை மறுமை தொலைய, ஒப்பற்ற இறைவனை, தில்லையில் தோன்றிய சோதிப்பெருமானை, சபாநாதனை, ஆனந்தக்கூத்தனை, சிதாகாசத்தில் விளங்குஞ் சங்கரனை, நெருப்பிடைப்பட்ட மெழுகைப்போலக் குழைந்து குழைந்து உருகித் தியானஞ் செய்வாய் மனமே. தியானஞ் செய்வாய்மனமே சிவபெருமானை சிவந்த பொன்னம்பலத்தில் நடனம் செய்கின்ற நடராஜனை தியானஞ் செய்வாய் மனமே.

இந்த உடம்பும் உயிரும் சேர்ந்தால் வாழ்வு. உயிர் பிரிந்தால் உடம்பு அழியும் இறைவனும் இன்னுயிரும் ஆதியானவை. எனவே உடலும் உயிரும் சேர்ந்திருக்கும்போதே நம் காரியங்களை மேற்கொள்ள வேண்டும். அழியும் உடம்பைப் பேணினாற்றான் உயிர் தன்னை உயர்த்திக் கொள்ளும். மீண்டும் மீண்டும் பிறக்கும் வேலை நிகழாது இதை மனத்தில் பதித்து உடம்பைப் பேணினாற்றான் உயிரைப் பேணி விடுதலை அடையலாம் எனக் கூறுகின்றார்.

உடம்பார் அழியில்உ யிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாடடார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே
உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென
உடம்பினையான் இருந்து ஓம்புகின்றேனே

எனவே நிலைமையை உணர்வோம். ஆத்மீக விடுதலை பெற உடம்பு வேண்டும். இவ்வுடம்பை சுகாதாரமான வழியிற் பேணி, வாழ்க்கை நீரோட்டத்துடன் ஆத்மீக நெறியைக் கலந்து, உயிர் மேம்பாடு அடைய நல்வழியில் நடப்போமாக.

---

*மனிதனிடமுள்ள எல்லாச் சக்திகளையும் விட ஆத்ம சக்தியே பெரிது.*

*உழைப்பிலேதான் சுகம் உள்ளது.*

# திருத்தொண்டு நெறி

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**

இந்த மண்ணிலே பிறந்த ஒவ்வொருவரும் தாம் வாழ்வதற்கு ஏதாவதொரு தொழிலைச் செய்தே ஆக வேண்டும். உழைக்காமல் உண்பதை தண்டச் சோறு என்றே கூறுவார்கள். மூளை பலம் குறைந்தவர்களும் தங்கள் முயற்சியால் உழைப்பாளிகளாக மாறி விடுவார்கள். உற்சாகத்துடன் உழைப்பவர்களுக்கே திருமகளின் கடாட்சமும் கிடைக்கும். 'முயற்சியுள்ள மானிடரில் சிங்கம் போன்றவனையே திருமகளும் அணைவாள்" என்றே பஞ்சதந்திரமும் கூறுகிறது. எத்தகைய சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அறிவு இருந்தாலும் சோம்பேறிகளுக்கு வாழ்வில் உயர்வு இல்லை. தன்னிடம் கைப்பொருள் ஒன்றும் இல்லையே என்று சோம்பிச் சும்மா இருப்போரைக்கண்டால் அவனுடைய அறியாமையை எண்ணிப் பூமாதேவி சிரிப்பாள் என்பதை

'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

எனத் திருக்குறள் கூறுகிறது. பணத்தை எதிர்பார்த்துக் காரியங்கள் செய்வதைத் தொழில் எனவும் அப்படி எதையும் எதிர்பாராமல் பணியாற்றுவதைத் தொண்டு என்றும் அழைப்பர். மண்ணில் வாழும் மக்களாகிய நாம் தொண்டையும் தொண்டர்களையும் போற்றிப் பழகவேண்டும். பெரியவற்றுள் எல்லாம் பெரியதாகத் தொண்டர்களின் பெருமையைத் தமிழ் மூதாட்டி ஔவையாரும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

"இறைவனோ தொண்டருள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை பேசவும்பெரிதே"

என்பதே ஔவையின் கூற்று ஆகும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனின் திருவடிகளை அடைவதற்குச் சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணை செய்யும் என்பதை
"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனடி தொழுமே"

---

*தருமத்தை சூது கவ்வும். பின்பு தருமமே வெல்லும்*

எனச் சிவஞானபோதத்தின் பன்னிரெண்டாம் சூத்திரம் கூறுகிறது.

சூரியனுடைய வெப்பத்திலும் பார்க்கச் சூரிய வெப்பத்தை தன் அகத்தே இழுத்து வைத்திருக்கும் மணலின் சூடு அதிகமாக இருக்கும். இதேபோல இறைவனின் திருவருளிலும் பார்க்க இறையருளைப் பெற்று வைத்திருக்கும் சிவனடியார்களின் அருள் உயர்வானது என்பதைப் பின்வரும் நீதி வெண்பாப் பாடல் குறிப்பிடுகிறது.

**"ஈசனெதிர்நின்றாலும் ஈசனருள்பெற்றுயர்ந்த**
**நேசரெதிர் நிற்பதரிதாமே – தேசுவளர்**
**செங்கதிர வன்முன்நின்றாலும் அவன்கரணம்**
**தங்கு மணல் நிற்ப தரிதேகாண்"**

தொண்டர்களின் பெருமையைக் கூறும் நூலாகிய பெரிய புராணத்திற்குத் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. அன்பும், பணிவும், பக்தியும், தொண்டும், தியாகமும், வீரமும் நிறைந்த சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல் ஆகையால் இதனை மாக்கதை என்றும் அழைப்பர். பெரிய புராண அடியார்களிற் பலர் சிவத்தொண்டும் பசுத்தொண்டும் செய்து வந்தார்கள். செய்த பணிகள் பலவற்றையும் பலன் எதுவும் கருதாமல் ஈஸ்வர அர்ப்பணமாகவே செய்தார்கள்.

திருத்தொண்டுநெறிக்கே இலக்கணமாக வாழ்ந்த அப்பர் பெருமானின் குறிக்கோள் வாசகம் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதாகும்.

வாக்காலும் வாழ்வாலும் ஒருமித்து வாழ்ந்த அப்பரடிகள் தான் செய்த திருத்தொண்டுகளைத் தனது பாடல்களிலே தந்துள்ளார். பூவும் நீரும் கொண்டு இசையோடு கூடிய தமிழ்ப்பாடல்களால் நாளாந்தம் இறைவழிபாடு செய்து வந்த நிகழ்வினை அப்பர் பெருமான்

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

அப்பர் பெருமான், தானே நடமாடும் கோயிலாகத் திரிந்தார் எனச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகின்றார். இவருடைய கனிந்த

---

*அச்சமே மடமை. அச்சம் இன்மையே அறிவு*

உள்ளத்தில் இருந்து வந்த பாடல்கள் கல்மனத்தையும் கனிந்துருகச் செய்பவை. இவரைப் "பதிகச் செஞ்சொல் மேய செவ்வாய்" எனச் சேக்கிழார் பெருமானும் "ஞானப்பாடல் தொடையறாச் செவ்வாய்" என மாதவச் சிவஞான சுவாமிகளும் போற்றுகின்றார்கள்.

நாவுக்கரசர் பெருமான் கையில் உழவாரம் ஏந்திப் புல்பூண்டுகளைச் செதுக்கி ஆலயங்களில் சிவப்பணி செய்து வந்தார். சிவக்கோலத்தோடு கண்களில் இருந்து அருவி நீர் சொரிய மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறை பணியே செய்தார். உலக மக்கள் அனைவரும் சிறப்புடன் அமைதியாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருத்தொண்டு செய்தார் என நாவுக்கரசரின் சிவக்கோலத்தை சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திலே சித்திரிக்கின்றார்.

**மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில்**
**சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே**
**சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்**
**பார்வாழத் திருவீதிப்பணி செய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்**

சிவனடியார்களின் பசிப்பிணி போக்குதலை உயர்ந்த அறமாகக்கொண்டு தொண்டு செய்த அடியார்கள் பலரைப் பெரியபுராணத்திலே காணலாம்.

'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்"

என்ற சேக்கிழார் பெருமானின் வாக்கிற்கு இலக்கணமாகப் பல சிவனடியார்கள் செயற்பட்டார்கள். அடியவர்களுக்கு அன்னம் இடும் பணியை ஆற்றி வந்த இளையான்குடிமாறநாயனார் வறுமை வந்துற்ற போதும் தாம் செய்து வந்த திருத்தொண்டிலிருந்து வழுவவில்லை. இரவு நேரம் பசித்து வந்த சிவனடியார் ஒருவருக்கு உணவு கொடுப்பதற்காக, வயலிலே விதைத்த விதை நெல்லை எடுத்து வந்து அமுதாக்கினார். சிறு பயிராகிய பசளிக் கீரையை இருட்டிலே தடவிப் பிடுங்கிக் கறியமுதாக்கினார். பசளிக்கீரையைப் பறிக்க வந்த வரலாற்றைக் கூற வந்த சேக்கிழார் பெருமான், இளையான் குடிமாற நாயனார் பசளிக் கீரையை மட்டும் பறிக்கவில்லை. தனது

பாச வினைகளையும் வேரோடு களைந்தார் என்பதைக்
“குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப்பாசப்
பழிமுதல் பறிப்பவர் போலப் பறிந்தவை கறிக்கு நல்க”
எனக் குறிப்பிடுகின்றார்.

தொண்டர்களுக்கும் பக்தர்களுக்கும் உரிய இடமே ஆலயமாகும். மிண்டு மனத்தவர்கள் எவருக்கும் ஆலயங்களில் இடமில்லை என்பதை

“மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்”

எனச் சேந்தனார் பெருமானும் திருப்பல்லாண்டில் கூறுகின்றார். இன்று நமது ஆலயங்களில் தொண்டு செய்பவர்களைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. தொழில் செய்பவர்களே மிகுதியாகக் காணப்படுகின்றார்கள். நமது சமூகமும் தொழில் செய்பவர்களுக்குக் கொடுக்கின்ற மதிப்பைத் தொண்டர்களுக்குக் கொடுப்பதில்லை. அதிகாரத்திற்கும், பணபலத்திற்கும், வெளிவேடத்திற்கும் மதிப்புக் கொடுப்பதைத் தவிர்த்து: உண்மையான தொண்டர்களைப் போற்றி மதித்து வணங்குவோமாக இருந்தால் நமது ஆலயங்கள் அனைத்திலும் தெய்வீக ஒளி சிறப்பாகப் பிரகாசிக்கும் யுத்த பூமியாக இருந்த நமது பிரதேசம் மீண்டும் சிவபூமியாக மாறும்.

---

## வாசகர்களுக்கு அன்பான வேண்டுகோள்

1948ஆம் ஆண்டு துறவற ஞானி ஆத்மஜோதி யாராலும், இல்லற ஞானி ராமச்சந்திராவினாலும் ஆரம்பிக்கப் பெற்ற ஆத்மஜோதிச் சஞ்சிகை பல சிரமங்களுக்கு மத்தியில் கனடாவில் வெளிவந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து வெளிவருவதற்கு ஆத்மஜோதி அன்பர்கள், ஆதரவாளர்கள், வாசகர்களிடமிருந்து நிதி உதவியை எதிர்பார்க்கின்றோம்.

ஆத்மீக நூல்களை வெளிவருவதற்கு உதவுவது ஞானதானமாகும். இவ் அரிய பணியில் பங்குபற்றி மேன்மை உறுவீர்களாக.

- ஆசிரியர்குழு

**ஆத்மஜோதி பத்திரிகைக்கு நிதி உதவி செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 416-724-6240**

# எழுமின், விழிமின் இலக்கையடையும் வரை தொடர்ந்து செல்மின்

## (Arise, Awake and stop not till the Goal is reached)

சு. சிவதாஸ் (முன்னாள் ஸ்ரான்லி கல்லூரி ஆசிரியர்)

நரேந்திரன் (அல்லது நரேந்திரநாத தத்தர்) என்பது சுவாமி விவேகானந்தரின் இயற்பெயராகும். ஜனவரி 12, 1863 இல் அவதரித்த இவர் வேத இறுதியில் அமைந்திருக்கும் உபநிடதங்களில் ஆர்வங்கொண்டு. உபநிடதங்கள் கூறும் எழுந்திரு விழித்துக்கொள், காலம் கடுகிறது" என்ற சொற்களால் கவரப்பட்டு Arisc Awakc and Stop not till the goal is reached என்று மேடைகளில் முழங்கி இந்திய இளைஞரை தட்டியெழுப்பிய காரணமாக ஜனவரி 12ஆம் நாளை 'தேசிய இளைஞர் தினம்' என்று பிரகடனப்படுத்தியிருக்கிறது இந்திய அரசு. சுமார் 39 வருடங்கள் வாழ்ந்த சுவாமியின் சொற்பொழிவுகளும், கவிதைகளும் திருமுகங்களும் 10 வருடகாலத்துக்கு இடைப்பட்டவையே. அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் இடம்பெற்ற உலகமதங்களின் மாநாட்டில் (Parliament of worlds religions) அல்லது சர்வமத பாராளுமன்றில் அவர் உரையாற்றும்போது அவருக்கு வயது 30. அதுதான் அவருடைய கன்னிப்பேச்சு, அதுவும் ஆங்கிலத்தில் சுமார் 7000 மக்கள் கூடியிருந்த அவையில் அவர் உச்சரித்த முதல் வார்த்தை, sisters and brothers of America என்பதாகும். முன்னர் பேசியவர்கள் dcar Ladics and Gentlemen என்று பாரம்பரிய முறையில் விழிக்க, கீழைத்தேய இந்துத்துறவி சோஷலிச அடிப்படையில் அமெரிக்க நாட்டுச் சகோதர சகோதரிகளே என விழித்தது கூடியிருந்த மக்களுக்கு பரவசத்தை உண்டுபண்ணியது. பலத்த கரகோசம் செய்து 3 நிமிடங்கள் எழுந்து நின்று இந்துத்துறவிக்கு மரியாதை செலுத்தினார்கள். பத்திரிகைகள், சஞ்சிகைகள் இவருடைய உரைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் புகழ்ந்தன. சில வாரங்களாக இடம்பெற்ற சர்வமத பாராளுமன்ற செயற்பாடுகளில் பல மில்லியன் கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். சுவாமிகளும் பல நாட்கள் உரையாற்றினார். இது நடந்தது 1893 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் அன்றைய தினத்திலே சுவாமி ஆற்றிய கன்னிப்பேச்சின் இறுதியில் 'மதக்குரோதங்கள்,

---

*தியானத்தில் உள்ளம் கரைந்துருகினால் ஆண்டவனின் அருள் நிச்சயமாகக் கிடைக்கும்*

இனக்குரோதங்கள், பகமைகள், வன்முறைகள், நீங்கி மக்கள் ஒருகுலமாக வாழவேண்டும் என்று கேட்டுப்பிரார்த்தித்தார். அவர் உரையாற்றிச் சரியாக 108 வருடங்களின் பின்னர் 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்திருந்த "உலக வியாபார நிலையம்' என்பதின் இரட்டைக் கோபுரங்கள் வன்முறையால் சேதமாகின. உயிர்கள் பலி கொள்ளப்பட்டன. இவ்வாறு எல்லாம் பின்னே நடக்கும் என்று முன்னே பிரார்த்தனை செய்து அதன் வலிமையை முன்னே தடுத்தார் போலும். இந்திய தாயகம் அன்னியர் ஆட்சியில் இருந்து 50 வருடங்களில் விடுதலையடையும் என்று தெரிவித்ததற்கு சரியாக 50 வருடங்களில் இந்தியா சுதந்திரம் பெற்றது. தமிழ்நாட்டில் சென்னையில் வாழ்ந்த கற்றறிவுள்ள இளைஞர்களே சுவாமி விவேகானந்தரை அமெரிக்கா செல்ல பலவழியிலும் ஊக்குவித்தார்கள். பின்னொரு நாட்களில், தமிழ்நாட்டில் தெய்வ ஒளியொன்று பிரகாசிக்கின்றது என்று சுவாமி தீர்க்க தரிசனம் சொன்னது ரமண மகரிஷியை குறிப்பிட்டதாகும். ரமணபகவான் பிரம்ம ஒளியோடு வாழ்ந்து எல்லோரும் காண ஒளியாகவே சென்று மறைந்தாரல்லவா? சுவாமி விவேகானந்தர் மறைந்தபொழுது ரமணருக்கு 23 வயது. ரமணர் 17 வயதிலேயே ஞானஒளியாக திருவண்ணாமலையில் திகழ்ந்தார் என்பது நாமறிந்ததே.

1893 இல் அமெரிக்கா சென்ற சுவாமி, அமெரிக்கா ஐரோப்பா ஆகிய கண்டங்களில் சுமார் 4 வருடம் வாழ்ந்து தாய்நாடு திரும்பி 1897 இல் புறப்பட்டார். அதற்கிடைப்பட்ட காலங்களில் சுவாமியின் பெயரும் புகழும் இந்தியாவிலும் இலங்கையிலும் பரவத் தொடங்கிவிட்டது. சுவாமி அக்காலத்துக் கடற் கப்பல் மூலமே பயணம் செய்ததால் முதன்முதலில் கொழும்புத்துறைமுகத்தை அடைந்தார். கொழும்பிலே உள்ள இந்துக்கள் துறைமுகத்திலிருந்து ஒரு தேரிலே இருத்தி ஊர்வலமாக இழுத்தார்கள். கொழும்பு Barnes Placc இல் உள்ள சிறப்பாக அமைக்கப்பட்ட இல்லத்திற்கு ஊர்வலத்தோடு சென்று தரிசனம் அளித்தார். அன்றைய சட்டசபை உறுப்பினராக இருந்த கௌரவ P. குமாரசாமி தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து சுவாமிகள் பேசினார். கொழும்பு வீதிகள் தெருக்கள் எல்லாம் மகர தோரணங்களாலும் பனை தென்னை இளங்குருத்தோலைகளாலும் அலங்கரிக்கப்

---

*பரஸ்பர நம்பிக்கை, நன்னடத்தை, நல்லொழுக்கம் ஆகியவைகளே வெற்றிக்கான வழிகள்.*

பட்டிருந்தது, எவ்வளவு தூரம் கொழும்பு வாழ் இந்துமக்கள், சுவாமிகளின் சிக்காக்கோ உரையினால் கவரப்பட்டிருந்தார்கள் என்பதை எடுத்து விளக்கியது. பின்னர் சுவாமிகள் குதிரைவண்டி மூலம் அனுராதபுரம் வழியாக யாழ்ப்பாணம் சென்றடைந்தார். அனுராதபுரத்து கதிரேசனாலயத்திலும் ஒரு சொற்பொழிவு ஆற்றியிருந்தார். யாழ் இந்துக்கல்லூரியில் வெளிவளவில் பிரத்தியேக மேடையும் அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தது. சுவாமி செல்லும்போது கொழும்புத்துறை வீதியாலே யாழ் நகரையடைந்தார். அவர் கொழும்புத்துறையை தாண்டுகிறபொழுது, பாலைவனத்திற் தோன்றும் பசுஞ்சோலைபோல் அவ்விடம் நல்ல குளிர்ச்சியாக இருக்கிறதே என்றாராம். இது தவத்திரு யோகர்சுவாமிகள் கொழும்புத் துறைவீதியில் அமைந்த ஆச்சிரமத்திலே பிற்காலத்தில் தங்கி தவமியற்றப் போகிறார் என்பதை முற்கூட்டியே சுவாமி அறிந்திருந்தார் என்பதை இன்று புலப்படுத்துகிறது. வீதி நெடுகிலும் மக்கள் கூட்டமாகச் சென்று யாழ் இந்துக்கல்லூரியின் பிரத்தியேக மேடையை அடையும்போது சுமார் பத்துப்பதினையாயிரம் மக்கள் கூடிவிட்டார்களாம்.

சுவாமிக்குரிய வரவேற்புரையைத் தொடர்ந்து சுவாமி விவேகானந்தர் பேச ஆரம்பித்தார், அதில் அன்று இருந்து கேட்ட பார்வையாளர்களில் இளைஞனாக இருந்த யோகர் சுவாமிகளும் அடங்குவர். சுவாமி விவேகானந்தர் கம்பீரமாக எழுந்து "Thc subject is vast, but the time is short" (விடயமோ பெரியது ஆனால் கால அவகாசமோ குறுகியது) என்று ஆரம்பித்து மேடையின் இடப்புறத்திலிருந்து நடந்து வலப்புறமாகவும் வலப்புறத்திலிருந்து இடப்புறமாகவும் மாறிமாறிச் சென்று கர்சித்தார் என்று பின்னர் தவத்திரு யோகர்சுவாமிகள் தம் பத்தர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். சுவாமி விவேகானந்தர் ஈழத்து வருகையை முடித்துக்கொண்டு தாய்நாடு செல்லும் வழியில் முதன்முதலாகச் சென்னைத் துறைமுகத்தில் இறங்கினார். சென்னை மக்களும் கொழும்பு மக்கள் செய்த வண்ணமாக அலங்கரிக்கப்பட்ட தேரிலே சுவாமியை இருத்தி இழுத்துச் சென்றார்களாம்.

சுவாமியின் ஈழத்து வருகை இந்துக்களுக்கு புத்துணர்ச்சி அளித்தது. இந்துமன்றங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பிலே விவேகானந்த சபையொன்று இந்துக்கள் சார்பில் ஆரம்பிக்கப்பட்டது.

---

*ஒரு கொள்கைக்காக துன்பத்தை ஏற்றுக் கொண்டபிறகு பின்வாங்கக் கூடாது.*

அது வருடாவருடம் மாணவர்களுக்கு பரீட்சைகள் வைத்து இந்துசமய அறிவு வளர்ச்சிக்கு இன்றும் பாடுபடுகின்றது. சுவாமி அமைத்த இராமகிருஷ்ண மிஷன் என்ற அமைப்பின் பேரில் தமிழ் இந்துக்கள் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்லூரிகள் அமைக்கப்பட்டு இன்றும் இயங்கி வருகின்றன. மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்த சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து துறவியாகி, மட்டக்களப்பு கல்லடி உப்போடை என்னும் இடத்தில், கொழும்பு இராமகிருஷ்ணமிசனின் கிளையொன்றை ஆரம்பித்து வைத்தார். இவ்வாறு கொழும்பிலும் மட்டக்களப்பிலும் இராமகிருஷ்ண துறவியர் மடம் உருவாவதற்கு சுவாமி விவேகானந்தரின் ஈழத்து வருகையே காரணமாகும். இராமகிருஷ்ண பரமகம்சரின் 17 துறவிச்சீடர்களில் சுவாமி விவேகானந்தரே முதன்மையாக விளங்கினார். இன்னொரு சீடனாகிய சுவாமி சிவானந்தாவே, காரைதீவு விபுலானந்தருக்கு தீட்சை அளித்த குருவாவார். இராமகிருஷ்ண பரமகம்சர் ஒரு முறை, சுவாமி விவேகானந்தர் சப்த ரிஷிகளில் ஒருவர் என்றும் தனது ஞானத்தை உலகுக்கு அளிக்கவே அந்த ரிஷியை உலகுக்குக் கொண்டு வந்ததாகவும் சொன்னார். சுவாமி விவேகானந்தர் 39 வயது முடிந்து சுமார் 6 மாதங்களில் உடலை விடுக்க திருவுளங்கொண்டு கடைசி மூன்று நாளும் ஒரு அறையிலே ஏகாந்தமாயிருந்து உடலை நீத்துக் கொண்டார்.

அஞ்சாமை என்பது அவரது மூச்சாக இருந்தது. நாமெல்லோரும் அடிப்படையிலே இறைவன் என்கின்ற அத்வைத போதனையையே மக்களுக்கு எடுத்தியம்பினார். முதலில் உணவு பின்பே ஆன்மீகம் என்று சொன்னார் மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென்றார் அவருடைய பேச்சுக்களும் எழுத்துக்களும் ஞானதீபம் என்ற பெயரில் 16 பாகம் அடங்கிய நூல்களாக தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது பெரும்பாலும் ஆங்கிலத்திலேதான் அவருடைய ஆக்கங்கள் இருந்தன. அதில் ஞானதீபம் 9 பாகங்களே. சுவாமிகளின் 150 ஆவது பிறந்த நாள் பூர்த்தி விழா உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. அந்த வகையிலே அவருடைய திவ்விய சரிதத்தின் ஒரு எள்ளளவு கணிசமான கட்டுரையே மேலே தரப்பட்டதாகும். ஏனைய சுவாமிகளின் நூல்களை மக்கள் வாசித்து முழுப்பயனை அடைவார்களாக. சுவாமி மறைந்தது 1902 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் திகதியாகும்.

---

*சிறுமைத் தனமான செயல் செய்பவனைப் பார்த்து நீ சிரிக்கிறாய். உன்னைப் பார்த்து இறைவன் சிரிக்கிறான்.*

# இளைய தலைமுறையினரின் இணையில்லா வழிகாட்டி சுவாமி விவேகானந்தர்

வ. உமாகாந்தன், இந்து சமயப்பேரவை உறுப்பினர்

உலகில் சுவாமி விவேகானந்தரைப் பற்றி அறியாதோர் எவருமில்லை எனலாம். சுவாமியின் வாழ்க்கை தியாக வரலாறாக அமைந்துள்ளது. சுவாமி விவேகானந்தர் இளைய தலைமுறையினரின் இணையில்லாத வழிகாட்டியாகவும், அவரது கருத்துக்கள் உலகம் உள்ளளவும் எப்போதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமாகவுள்ளது. ஆயிரமாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய இந்து சமயத்தைப் பற்றியும், முழுமுதற் கடவுளாம் சிவபெருமானைப் பற்றியும், முனிவர்கள், ரிஷிகள், யோகிகள், மகான்கள், சமயகுரவர்கள் செய்த அற்புதங்கள், மனித குலத்திற்கும் பிற உயிர்களுக்கும் செய்த தொண்டுகள் என்பன பற்றிக் கேள்விகளும் நம்பிக்கையீனங்களும் கொள்ளும் இன்றைய மனிதர்கள் மத்தியில் இணையில்லாத, நவீன, வீரத்துறவியாக சமீபகாலங்களில் வாழ்ந்து காட்டி, மக்கள் மத்தியில் இருந்த தவறான எண்ணங்கள், அச்சம், நம்பிக்கையீனம் என்பவற்றை உடைத்தெறிந்தவர் சுவாமி விவேகானந்தர் சுவாமிகளைப் பற்றி அறிந்து கொண்டு அவரது கருத்துக்களைப் பின்பற்றி வாழ்ந்தாலே மனிதர்கள் இப்பூவுலகில் பிறந்ததற்கான பயனை முழுமையாக அடைந்து விடுவர்.

சுவாமிகள் அப்போதைய பிரிட்டிஸ் - இந்தியாவில் உள்ள கல்கத்தா நகரில் 1863 ஆம் ஆண்டு தை மாதம் 12 ஆம் நாள் அவதரித்தார். இவரது இயற்பெயர் நரேந்திரன். தந்தையார் விஸ்வநாத தத்தர் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றியவர். தாயார் புவனேஸ்வரிதேவி அம்மையார் பாடசாலைக்காலங்களில் அவர் படித்த பிறெசிடென்சி கொலிச்சில் அவ்வாண்டுக்கான முதல்தர மதிப்பெண்களைப் பெற்ற ஒரே ஒரு மாணவனாகவும் அவர் இருந்துள்ளார். பல்கலைக்கழகப் பட்டங்களுடன் ஆங்கிலம் உட்பட, பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். சுவாமிகள் கல்விகற்ற General Assembly's Institution அதிபராகவிருந்த Dr. William Hastie சுவாமிகளைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார், "Narendra is Really a Genius. I have travelled far and wide but I have never come across a lad of his

---

*அறிவுக்கு முற்றுப்புள்ளி வைக்காதே. நீ சாகும் வரை உன் அறிவுக் கதவு திறந்தேயிருக்கட்டும்.*

talents and possibilities, even in generleman universities, among philosophical students."

1893 ஆம் ஆண்டிலே அமெரிக்காவின் சிக்காகோ நகரத்தில் நடைபெற்ற சர்வசமய மாநாட்டில், மண்டபத்தில் கூடியிருந்த ஏழாயிரத்துக்கும் அதிகமானோரைப் பார்த்து, அமெரிக்காவின் சகோதரிகளே, சகோதரர்களே (Sisters and Brothers of America) என்று விழித்து ஆற்றிய உரை உலகப்புகழ்பெற்றதாக இன்றும் பேசப்படுகிறது. கட்டிடத்தில் கூடியிருந்த அத்தனைபேரும் எழுந்து நின்று செய்த கரகோஷம் பல நிமிடங்களாக நீடித்ததாகச் சொல்லப்படுகிறது. வேதாந்தக் கருத்துக்களையும், இந்து சமய தத்துவங்களையும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தியவர் சுவாமி விவேகானந்தர் வேதாந்தத்தைப் பரப்புவதற்கென்றே அவதரித்தவர் என்று பின்னாளில் போற்றப்பட்டவர் சுவாமி அவர்கள் இந்து சமயம் உலகின் பிரதான சமயம் என்பதை 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சுவாமிகளின் மூலமாக உலகம் முழுமையாகத் தெரிந்து கொண்டது, இந்து சமயப் புத்துணர்ச்சி யையும், அடிமை இந்தியாவின் தேசிய உணர்வையும் வளர்த்து அதன் விடுதலைக்கு வித்திட்டவர் சுவாமி விவேகானந்தர்.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் முதன்மைச் சீடராக சுவாமிகள் இருந்தார்கள். குருதேவரின் மறைவின் பின்னால் சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு யாத்திரையாகச் சென்றார். அப்போது மக்களின் ஏழ்மை நிலையையும், அடிமைத் தனத்தையும் கண்டு கலங்கினார். இந்தியாவின் சுதந்திரம் மகாத்மாகாந்தி போன்றோரால் பெறப்பட்டதாக அறிகிறோம். உண்மையில் இந்தியாவின் சுதந்திரத்துக்கு ஆணிவேராக நின்று செயற்பட்டவர் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் என்பது வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்பவர்களுக்குப் புரியும். சுவாமி விவேகானந்தர் தேச அபிமானம் உள்ள துறவியாக வாழ்நதார். அவரது பிறந்த தினம் இந்தியாவின் தேசிய இளைஞர் தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

சுவாமி விவேகானந்தரின் மனத்தில் ஒரு கேள்வி எழுந்து கொண்டிருந்தது. அது கடவுள் இருக்கிறாரா, இருந்தால் கடவுளைக் கண்டதுண்டா என்பது. சுவாமிகள் சந்தித்த பெரியவர்கள், ஞானிகளிடத்தில் இக்கேள்வியைக் கேட்டார். யாருமே அவர் மனம்

---

*நண்பரைப் பாராட்ட வேண்டியிருந்தால் பலர் முன்னிலையில் பாராட்டுங்கள்.*

ஏற்றுக் கொள்ளும்படியான பதிலை அளிக்கவில்லை. எது உண்மையானது அதை அறிய வேண்டும் என்று தாகத்துடன் மேலைநாட்டு ஞானிகளின் புத்தகங்கள் உட்பட பல நூல்களைக் கற்றார். அவை எவையுமே அவருக்குத் தெளிவைத் தரவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைத் தரிசித்த போதும் நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு குரு தேவர் 'நான் இறைவனைக் கண்டிருக்கிறேன். இறைவனோடு பேசியிருக்கிறேன். நீ விரும்பினால் உன்னாலும் இறைவனைக் காணமுடியும், இறைவனோடு பேசமுடியும்' என்றார். எவரையும் ஏற்காத சுவாமி விவேகானந்தர் குருதேவரை ஏற்றுக் கொண்டார்.

இதன் பின்னால் குருதேவரைப் பார்க்க தட்சிணேஸ்வரத்துக்கு அடிக்கடி வரத்தொடங்கினார் சுவாமிகள். ஒரு நாள் குருதேவர் சுவாமிகளை நெருங்கி வந்து தனது வலது பாதத்தை சுவாமிகளின் சிரசின் மீது வைத்தார். கண்முன்னால் இருந்தது அனைத்தும் கரைந்துபோய் வெட்டவெளியாக இருப்பதை சுவாமிகள் உணர்ந்தார். தான் மனவலிமையும், உடல்வலிமையும் உடையவர் என்ற மேலான எண்ணம் சுவாமிகளுக்கு இருந்தது. இவற்றை ஒரே கணத்தில் ஒன்றுமே இல்லாமல் செய்துவிட்ட குருதேவரின் தவவலிமையை, உள் ஒளியை அறிந்து கொண்டார். குருதேவரின் அற்புதச் செயல்களும், அன்பும் சுவாமி விவேகானந்தரின் உள்ளத்தில் புதியதொரு விளக்கத்தைத் தோற்றுவித்தன.

தட்சிணேஸ்வரத்துக்கு வருகை தரும் போதெல்லாம் குருதேவர் சுவாமிகளுக்கு உயர்ந்த தத்துவங்களைப் போதிப்பார். ஆங்கிலக்கல்வியும், விஞ்ஞான அறிவும் பெற்றிருந்த சுவாமி விவேகானந்தரால் சில தத்துவங்களை ஏற்க முடியாமல் இருந்தது. குருதேவர் ஒருமுறை ஜீவாத்மா-பரமாத்மா இரண்டும் ஒன்றே என்ற தத்துவத்தை விளக்கினார். சுவாமிகளின் மனம் அதை ஏற்க மறுத்ததால் அறையில் இருந்து வெளியே வந்துவிட்டார். வெளியே நின்றிருந்த நண்பரிடம் அத்வைத தத்துவத்தைப் பற்றியும், அதைத் தன்னால் ஏற்க முடியவில்லை என்பதையும் கூறினார். அங்கிருந்த ஜடப்பொருட்களைக் காட்டி இவையும் கடவுள், நானும் கடவுள், நீயும் கடவுள் என்பது சரியான வாதமாக எனக்குத் தோன்றவில்லை என்றார். அத்வைதத்திலேயே ஆழ்ந்து அமிழ்ந்து எல்லாவற்றையும் பிரம்மமாகக் காணும் நிலையை அடைந்தவர் குருதேவர். வெளியில்

---

*இலட்சியம் குன்றாது உறுதி தளராமல் இருந்தால் தோல்வி ஏற்படாது.*

வந்து சுவாமி விவேகானந்தரைத் தொட்டார். அந்தத் தொட்டுணர்வினால் எல்லாமே இறையுருவமாக சுவாமிகளுக்குத் தோன்றியது. உள்ளத்தில் ஒரு தெளிவு எல்லாம் கடவுளே என்ற உணர்வு நிலையை எய்தினார். நடந்து செல்லும்போது எதிர்ப்பட்டவை அனைத்தும், எல்லாமே கடவுள் வடிவமே என்ற தெளிந்த நிலையை அடைந்தார். இத்தகைய ஆன்மீக அனுபவத்தை குருதேவர் தமது ஸ்பரிச தீட்சை மூலமாக வழங்கினார். அந்த அனுபவத்தின் பின் சுவாமிகள் அத்வைத தத்துவத்தை ஏற்றுக் கொண்டார்.

சுவாமி விவேகானந்தர் ஏழை, எளியவர் மீது மிகவும் அன்பு கொண்டவர் மக்கள் சேவையே மகேசன் சேவை என்று உழைத்தவர். துயருற்றவர்களின் துயர் தீர்த்தும், பிணியுற்றவர் களின் பிணி தீர்த்தும் அவர்களுக்காகப் பணிபுரிந்தவர். குருதேவரின் பெயரால் சுவாமி விவேகானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட இராமகிருஷ்ண மிசன் இன்று உலகம் முழுவதும் நூற்றுக்கணக்கான கிளைகளைக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது. சுவாமிகள் முப்பத் தொன்பதாவது வயதில் மறைந்தபோது அவரது பணிகள் அவரது முதன்மைச் சிஷ்யையான அயர்லாந்தில் பிறந்த மார்கிரேட் நோபிள் என்கின்ற சுவாமிகளினால் நிவேதிதா என்ற தீட்சா நாமத்தைப் பெற்ற சிஷ்யையாலும், ஏனைய சீடர்களாலும் முன்னெடுக்கப்பட்டன. இன்று உலகம் முழுவதிலும் அவருடைய பணிகள் உலகில் பல நாடுகளில் இயங்கும் இராமகிருஷ்ண மடக் கிளைகளால் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

---

## 2012 தை மாதத்திற்குப்பின் ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

அமரர் காசிப்பிள்ளை நடராசா, புங்குடுதீவு 11ஆம் வட்டாரம்
16ஆவது வருட நினைவாக (2012) $200.00

அமரர் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, உடுப்பிட்டி
நினைவாக (2012) $100.00

அமரர் திருமதி நாகரத்தினம் கனகரத்தினம் அல்வாய்
நினைவாக (2012) $150.00

சிவ முத்துலிங்கம் அவர்களின் மணி விழாவை முன்னிட்டு பேரவையின் திருக்கூட்டத்தினரும் அங்கத்தவர்கள் சிலரும் மனமுவந்தளித்த அன்பளிப்பு $745.00

சிவ முத்துலிங்கம் அவர்களின் 61ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பேரவையின் திருக்கூட்டத்தினர் மனமுவந்தளித்த அன்பளிப்பு $515.00

---

# சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

**தொகுப்பு: சிவ முத்துலிங்கம்**

- ஆற்றலும், தூய்மையும் நிறை நிலையும் ஆத்மாவில் இருக்கின்றன.

- ஒரு காரியத்தின் பயனில் கருத்தைச் செலுத்துமளவிற்கு அக்காரியத்தைச் செய்யும் முறையிலும் கருத்தைச் செலுத்த வேண்டும்.

- குறிக்கோளுக்குச் செலுத்தும் கவனத்தை, அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்த வேண்டும்.

- எல்லாத் தீமைகளையும் எதிர்த்துப் போராடு

- அன்பாக நடந்துகொள். உதவிசெய், தொண்டுசெய்.

- மரணம் இல்லாப் பெருநிலைக்குத் தியாகமே நம்மை அழைத்துச் செல்கிறது.

- ஆத்மீகம் நமக்கு உண்மையான இன்பம் அளிக்கிறது.

- நாம் கடவுளுக்கு மிகவும் வேண்டியவர்கள்.

- எதையும் கைமாறு கருதாமல் மற்றவர்களுக்குக் கொடு.

- நம் ஆத்மாவிற்கும் ஆத்மாவாகக் கடவுள் இருக்கிறார்.

- அன்புக்காகவே அன்பு செலுத்த வேண்டும்.

- உண்மையானவர்களும், அன்புடையவர்களும் யாருக்கும் பயப்படத் தேவையில்லை.

- சில சூழ்நிலைகளில் தீமையை எதிர்ப்பதே ஒருவனுக்குக் கடமையாகும்.

- ஒவ்வொருவரும் தனக்கென்ற ஒரு சொந்த இலட்சியத்தை

வைத்துக் கொள்ள வேண்டும்.

- ✵ சுயநலம் இன்றி எந்த நேரமும் பணிபுரியும் இலட்சிய வாழ்க்கையே கருமயோகம்.

- ✵ என்னால் எதையும் செய்ய முடியும் என்று நீங்கள் நினைத்தால் அனைத்தையும் செய்து முடிப்பீர்கள்.

- ✵ மனிதனைப் பிணைத்திருக்கும் பந்தங்கள் என்ற கட்டுக்கள் கடவுளின் கருணையால்தான் அவிழும்.

- ✵ தூய்மையானவர்களும் மாசற்றவர்களும் இம்மையிலே கடவுளைக் காண்கிறார்கள்.

- ✵ நம் ஒவ்வொருவரிடத்திலும் எல்லையற்ற சக்தியும் தூய்மையும் ஆனந்தமும் இருக்கின்றன.

- ✵ வலிமைதான் வாழ்வு. பலவீனமே மரணம்.

- ✵ உதவி செய். சண்டை போடாதே. ஒன்றுபடுத்து. அழிக்காதே.

- ✵ நன்மையைப் போலவே தீமையில் இருந்தும் மனிதன் பெரும்பாடங்களைக் கற்றுக் கொள்கிறான்.

- ✵ ஞானம் அடைவது மனித சமுதாயத்தின் குறிக்கோள்.

- ✵ சிலநேரங்களில் இன்பத்தை விடத் துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது.

- ✵ மனிதனை உருவாக்குவதில் இன்பமும், துன்பமும் சரிசமனான இடத்தைப் பெறுகின்றன.

- ✵ உலக இன்பம் மனித வாழ்வின் இலட்சியம் அல்ல. ஞானம் ஒன்றுதான் இலட்சியம்.

- ✵ ஆண்டவனை உணர்ந்தவர்களை எதுவும் பாதிக்காது.

* உலகம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள்.

* தூய்மை உள்ளவர்களுக்குத்தான் பந்தங்களில் இருந்து விடுதலை கிடைக்கும்.

* ஆத்மாவை தூய மனதின் மூலமே அறிய முடியும்.

* இந்தப் பிறவியிலேயே இறைத்தன்மையை அடைவதுதான் வாழ்க்கையின் குறிக்கோள்.

* அளவற்ற தன்னம்பிக்கையுடன் வாழுங்கள்.

* பரம்பொருளை அறிந்தால்தான் நீங்கள் மீண்டும் இறப்பிலிருந்து காப்பாற்றப்படுவீர்கள்.

* மரணம் என்பது ஆத்மா ஒரு உடலில் இருந்து மற்றோர் உடலிற்கு இடம்பெயர்வதாகும்

* உலகம் ஏளனம் செய்வதைப் பொருட்படுத்தாமல் நீ உன் கடமைகளைச் செய்து கொண்டு போ.

* வலிமையும் பெருமையும், தன்னம்பிக்கையும் நம் சொந்தச் சொத்து.

* நல்ல வழியில் செல்வத்தைச் சேர்ப்பதும், சமுதாயத்திற்காக அதைச் செலவிடுவதும் ஒரு பெரும் வழிபாடாகும்.

* ஒவ்வொருவரும் தம்முடைய இலட்சியம் நிறைவேறுவதற்கு முடிந்தவரை சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

* பெரிய கோழை கூட உலகம் தன்னைப்புகழுமென்றால் பெரிய வீரனாக மாறிவிடுவான்.

* தன்னிடம் நம்பிக்கையில்லாதவன் கடவுளிடம் நம்பிக்கை வைக்க முடியாது.

# ஒன்றாரியோ இந்து சமயப் பேரவை நடத்திய சுவாமி விவேகானந்தரின் 150 வது ஜெயந்தி விழா

புதுவை இராமன்

கனடிய மண்ணிலே தமிழும், சைவமும், ஆன்மீக பக்தியுணர்வும் மேலோங்கிட எண்ணற்ற சைவ ஆலயங்கள் தமிழர்களின் கலாச்சார பாரம்பரியங்களுக்கு துணை நிற்கிறது என்பது நமக்குக் கிடைத்த ஒரு பாக்கியமாகும். மேலும் கூடுதல் சிறப்பு பெற்றிடும் வகையில் ரொரன்ரோவில் உள்ள சமூகக் கலை இலக்கிய ஆன்மீகக் கலாச்சார அமைப்புகளின் மத்தியில் ஒன்றாரியோ இந்து சமயப் பேரவை கடந்த பல ஆண்டுகளாக ஆற்றிவரும் ஆன்மீகப் பணிகள் அளப்பரியதாகும். நூற்றுக்கும் அதிகமான வயது முதிர்ந்த ஆண்கள், பெண்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இணைந்து இவ்வமைப்பின் சொந்த கட்டிடத்தில் ( 1473 வேர்ச்மெளண்ட் வீதி - எல்மெயர் லாரண்ஸ் நடுவில்) இயங்குகின்றனர்.

சைவ சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்து, ஒவ்வொரு வாரமும், பன்னிருதிருமுறைகள், திருப்புகழ், சித்தர் பாடல்கள் ஆகியவற்றை முற்றோதல் செய்தும் பல்வேறு ஆன்மீகச் சிறப்பு நிகழ்ச்சிகள், தமிழரின் விழாக்கள், குருபூசை போன்றவற்றையும், வருடந்தோறும் சைவ சமய மாநாடு நடத்தியும் பெரும் சாதனை புரிந்து வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இதன் தலைவராய் விளங்கும் சைவ துரந்தரர் கவிநாயகர் திரு கந்தவனம், செயலாளர், திரு சிவ.முத்துலிங்கம் ஆகியோர் பேரவையின் நிர்வாக சபை உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் ஆற்றிவரும் தமிழ்ப்பணி மற்றும் சமயப் பணி ஏராளம். அந்த வகையில் கடந்த 15.6.2013 அன்று சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த நாள் வைபவத்தை இந்தியத் திருநாட்டில் இந்த ஆண்டு முழுதும் மிகச் சிறப்பாகக் கொண்டாடி வரும் நேரத்தில், கனடாவிலும் இப்பேரவை உரையரங்கம், கவியரங்கம், பட்டி மன்றம் போன்ற நிகழ்ச்சிகளால் சுவாமிகளின் பெருமையை நம்மவர் மனதில் நினைவூட்டும் வகையில் மிகவும் பொருத்தமாகவும் சிறப்பாகவும் நடத்தி வருகை புரிந்த அனைவரையும் இன்புற வைத்தது. சுவாமி விவேகானந்தரின் 150வது ஜெயந்தி வைபவம் ஸ்காபரோ அருள்மிகு ஸ்ரீ செல்வ சந்நிதி ஆலய மண்டபத்தில் பேரவையின் தலைவர் கவிநாயகர் திரு கந்தவனம் அவர்கள் தலைமையில் இனிதே இடம் பெற்றது.

சுவாமி விவேகானந்தர், சுவாமி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மற்றும் அன்னை சாராதா தேவியின் திரு உருவப்படங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மங்கள விளக்குடன் காட்சி தர, ஸ்ரீ செல்வ சந்நிதி ஆலய ஸ்தாபகர் சிவஸ்ரீ புவநேந்திரர் அவர்கள் கற்பூரத் தீபாராதனையை காட்டி ஆசியுரை ஆற்றியதும், விழா தொடக்கத்தில் சுவாமி விவேகானந்தருக்கு தான் இயற்றிய 108 போற்றி துதிகளைப் பாடிய ஆசிரியர் திரு சிவதாஸ் அவர்களின் பங்களிப்பும், பேரவையின் பெண் உறுப்பினர்களான புனிதவதி சிவசுப்பிரமணியம், சந்திராதேவி கணேசராஜா, ராஜலட்சுமி சண்முகலிங்கம், சாரதாதேவி சோமசுந்தரம் ஆகியோர் அனைவரும் சிற்றுண்டி, தேனீர் வழங்கி உபசரித்த விதமும், அனைவரின் பெயரைப் பதிவு செய்த திரு திருச்செல்வம் அவர்களின் செயற்பாடும், செயலாளர் திரு சிவ.முத்துலிங்கம் அவர்கள் அமைத்திருந்த இந்து சமயப்பேரவை வெளியிட்டுள்ள பல்வேறு நூல்களின் விற்பனைக் காட்சியும், அன்றைய விழா நிகழ்ச்சிகள் அனைத்தையும் தனக்கே உள்ள தனித்துவமான இலக்கிய மற்றும் நகைச்சுவைப் பேச்சாற்றலால் கொண்டு சென்று, விழா நிகழ்வில் பங்குகொண்ட பிரபல பேச்சாளர்களை அறிமுகப்படுத்தி தலைமையேற்ற கவிநாயகரின் பங்களிப்பும் அபாரம் எனலாம்.


பேரவையின் பொருளாளர் திரு செ. சோமசுந்தரம் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து, பிரபல சட்டத்தரணியும், சிறந்த பேச்சாளருமாகிய திரு கனக மனோகரன் பீரங்கிப் பேச்சாளராக சுவாமி விவேகானந்தர் பற்றிய பல சிறப்புத் தகவல்களைக் கூறியதோடு, அவரது வாழ்க்கை சரிதத்திலிருந்து பல சுவையான நிகழ்வுகளை மேற்கோள் காட்டியும், சுவாமி விவேகானந்தர் என்ற ஞானி பிறந்திருக்காவிட்டால், இந்து சமயம் என்றோ இல்லாமற் போயிருக்கும். இந்திய இளைஞர்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி Youth arc uscd lcss (not usclcss) என்று கூறி இளைஞர்களின் ஆற்றல்களுக்கும் திறன்களுக்கும் பெருமை சேர்த்ததையும். அமெரிக்காவில் எழுச்சிமிகு ஆன்மீக உரையாற்றி, எப்படி இந்தியாவில் இமயமலை மிக உயர்ந்து விளங்குகின்றதோ, அதற்கும் மேலாக உலகம் உள்ள வரை இந்து சமயம் நிலைத்திருக்கும் என்பதை பறைசாற்றியவர் என்று புகழாரம் சூட்டி, அவரது தகமைகளை விவரித்து மிக இனிமையாகக் கூறி தனது வாழ்த்துரையை நிறைவு செய்தார்.

அவரது வாழ்த்துரையைத் தொடர்ந்து தலைமையுரை ஆற்றிய கவிநாயகரோ, சுவாமி விவேகானந்தரின் ஆளுமையான வீரம், விவேகம், அன்பு, பாசம், பரிவு, குருபக்தி மற்றும் தன்னை ஒரு ஆங்கிலமாது திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகக் கூறியதும், அதற்கு நரேன் என்னை திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எதனால் ஏற்பட்டது என்று வினவ, அதற்கு அம்மாது, உன்னைப்போன்று ஒருவனை மகனாகப் பெற வேண்டும் என்று கூற, அதற்கு அவர், அன்னையே இப்போதும் நான் உன் மகன் தான் என்று கூறி அவரது பிரம்மச்சரியத்திற்கு பெருமை சேர்த்துவிட்டார். மேலும் அவரின் ஆங்கிலப் புலமையோடு அவர் வேதாந்த சைவ சமய சித்தாந்தங்கள் அனைத்தையும் கற்றறிந்த ஒரு ஞானி என்பதால் தான் அவரது உரைகள் இளைஞர்களை வசப்படுத்தும் விதத்தில் அமைந்து இன்று வரை போற்றுதலுக்குரியதாக இருக்கிறது என்பதோடு குரு அருள் இன்றி இறையருள் இல்லை என்பதற்கு சுவாமியே ஒரு முன்னோடியாக வாழ்ந்து காட்டியவர் என்றார். இல்லறம் மற்றும் துறவறம் பற்றிய அவரின் கருத்துக்களும் அன்றைய ஜெயந்தி விழாவிற்கு பொருத்தமாய் அமைந்திருந்தது மேலும் அன்றைய நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியவர்களை வெகுவாகப் பாராட்டி தனது கண்ணோட்டத்துடன் கூடிய விமர்சனங்களையும் முன் வைத்துப் பெருமை சேர்த்துவிட்டார்.

முன்னாள் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சிவநாயகமூர்த்தி அவர்கள் சுவாமி விவேகானந்தரைப் பற்றி அறியாதவர்கள் கூட அறிந்துகொள்ளும் வகையில் அவரது வாழ்க்கை. அவரது சித்தாந்தங்கள், அவரது சிந்தனையில் நிலவிய உலகப்பற்றும் ஆன்மீகத் தேடல் பற்றியும், அவரின் அரும் பெரும் ஆன்மீகச் சேவையால் அகிலம் முழுவதிலும் ஏற்பட்ட விழிப்புணர்வும், இளைய சந்ததியினரின் மனதில் விடுத்த அறைகூவல்களான 'எழுமின் - விழிமின் - செயற்படு' போன்ற தாரக மந்திரங்களின் சிறப்பினை தனது ஆழ்ந்த படிப்பாற்றலால் மிக எளிமையாக அழகுத் தமிழில் உரையாற்றித் தனது வாழ்த்துக்களைக் கூறிச் சிறப்பித்தார்.

அடுத்துச் சிறப்புரை ஆற்றிய முன்னாள் கொத்தணி அதிபர் திரு சிவபாலு அவர்கள் தனது உரையில், சுவாமி விவேகானந்தரின் இளமைப் பருவத்தில் அவரிடையே இயல்பாக அமைந்திருந்த ஆன்மீகத் தேடல் பற்றியும், குறிப்பாக இறைவன் என்று ஒருவன்

# சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜெயந்தி விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்





இருக்கின்றானா! என்ற அவரது ஆன்மீக வினாவிற்கு சுவாமி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரால் விடைபெறப்பட்டு, அவரையே தனது குருவாக ஏற்றுக்கொண்டதையும், முதன் முதலாக அமெரிக்க மண்ணில் இந்து சமய மாநாட்டில் பங்கேற்று, அயல்நாட்டினரின் மரபான Ladies & Gentlemen என்ற salutation ஐ, மாற்றி தனது ஆரம்ப உரையில் 'அன்புள்ள சகோதர சகோதரிகளே' என்று தொடங்கி அமெரிக்கர் மனதில் இந்திய தேசத்தின் ஆன்மீக கலாச்சார மரபிற்கு பெருமை சேர்த்ததையும், அவரது லட்சியமே உலகில் அன்பும், சமாதானமும் நிலவி ஏழ்மையில்லா, ஜாதி மத பேதமில்லா நிலை ஏற்படவேண்டும் என்பதனை மிக விரிவாகக் கூறிச் சுவாமியின் பெருமைகளை பல்வேறு மேற்கோள்களுடன் விவரித்தார். குறிப்பாக தனது குரு காட்டிய ஆன்மீகப்பாதையும், காளி மீது கொண்ட பக்தியுணர்வையும், உலக நாடுகள் அனைத்திற்கும், குறிப்பாக இலங்கையின் பல பகுதிகளுக்கு சென்று ஆன்மீகச் சொற்பொழிவு நடத்தியதையும். குருவே சீடனைத் தேடி காத்திருக்கும் வேளையில், அவரிடம் சென்று தனது ஆன்மீகத் தேடலுக்கு அனைத்து பதில்களைப் பெற்றதோடு மட்டுமின்றி, அவரது மறைவிற்குப் பின்னர் சர்வதேச அளவில் தனது குருபக்திக்கு அடையாளமான ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை ஸ்தாபித்து, கால்நடையாகவே இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்குச் சென்று, கன்னியாகுமரியில் உள்ள வங்கக் கடலில் இருந்த பாறைமீது அமர்ந்து மூன்று நாட்கள் மௌனவிரதத்துடன் தியானித்த வரலாற்றினை மிக எளிமையாகக் கூறி அனைவரின் சிந்தனைக்கு விருந்தளித்தனர் சிறப்புரை ஆற்றியவர்கள் என்றால் மிகையில்லை.

அன்றைய நிகழ்வின் சிறப்பு அம்சமாக கவிஞர் திருமதி ராஜ்மீரா இராசையா அவர்களின் தலைமையில் சுவாமி விவேகானந்தர் பற்றிய கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர் சிறிபஞ்சநாதன், கவிஞர் விமலநாதன், கவிஞர் அருட்கவி த.ஞானகணேசன் ஆகியோர் தேன்தமிழ்ப் பாடல்களாக தங்களது கவிதைகளை இனிமையாகப் பாடிச் சுவாமி விவேகானந்தருக்கு பாமாலை சூட்டி அனைவரையும் மகிழ்வித்தார்கள்.

கவியரங்கத்தைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவுகளாக கனடா கவிஞர் கழகத் தலைவர் கவிஞர் சி.சண்முகராஜா, முன்னாள் ஸ்ரான்லி கல்லூரி ஆசிரியர் திரு சிவதாஸ் ஆகியோரின் உரைகளும் இடம் பெற்றது.

இறுதி நிகழ்வாக பெரும்புலவர் மொகமது ஹன்சீர் அவர்கள் தலைமையில் விவேகானந்தரிடம் விஞ்சி நின்றது குருஞானமா! பரஞானமா' என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றப் பேச்சாளர்களாக கவிஞர் திருமதி பவானி தர்மகுலசிங்கம், ஊடகவியலாளர் திரு புதுவை இராமன் ( குருஞானமே என்ற அணியிலும்), திருமதி ஜெயகௌரி சுந்தரம்பிள்ளை மற்றும் கவிஞர் அகணி சுரேஸ் ஆகியோர் (பரஞானமே என்ற எதிரணியிலும்) பல்வேறு மேற்கோள்களுடனும், சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையின் பின்னணியில் சுவையாக, சிந்தனைக்கு விழிப்பாகவும் தங்கள் வாதப் பிரதிவாதங்களை முன்வைத்து அனைவரையும் ரசிக்க வைத்தனர். பட்டி மன்ற நடுவர் இரு அணிகளின் கருத்துக்களைப் பற்றி தனது விமர்சனத்தைக் கூறியதோடு, இந்து மதத்தில் உள்ள நான்கு வேதங்களைப் பிற மதங்களோடு ஒப்பிட்டு, எம்மதமும் சம்மதம் என்ற அளவில் மிக அற்புதமான தனது ஆழ்ந்த கருத்துக்களை முன்வைத்து, விவேகானந்தரிடம் விஞ்சி நின்றது பரஞானமே என தீர்ப்பு வழங்கி அனைவருக்கும் நன்றி பாராட்டி நிறைவு செய்தார்.

பேரவை உறுப்பினர் திரு மனோகாந்தன் அவர்களின் நன்றியுரையுடன் அன்றைய ஜெயந்தி விழா இனிதே நிறைவுற்றது.


---

*தெய்வத்தை நம்பு. சுயநலத்தை மற. எல்லா இன்பங்களையும் பெறுவாய். இது சத்தியம்.*

*மாணவர்கள் இளமையில் கற்கும் சிறந்த கல்வி கற்பக மரம் போன்றது.*

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

## செல்லப்பாச் சுவாமிகளின் குருபூசை



செல்லப்பாச் சுவாமிகளின் குருபூசை 11-04-2013 வியாழக்கிழமை மாலை நான்கு மணி தொடக்கம் ஏழுமணிவரை ஆத்மஜோதி இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினர் பலர் பக்தியுடன் கலந்துகொண்டனர். செல்லப்பாச் சுவாமிகளைப் பற்றிச் சிவயோகசுவாமிகள் பாடிய நற்சிந்தனைப் பாடல்கள் தெரிந்து எடுத்து ஓதப்பெற்றன. சுவாமிகளின் திருஉருவப் படத்திற்கு திருவடி வணக்கம் திருக்கூட்டத்தினரால் செலுத்தப் பெற்றது.

## திருப்புகழ் முற்றோதல்



திருப்புகழ் முற்றோதல் 16-02-2013 சனிக்கிழமை தொடக்கம் 13-04-2013 சனிக்கிழமைவரை வாரந்தோறும் முற்றோதப்பெற்று திருக்கூட்டத் தினரால் பூர்த்தி செய்யப்பெற்றது. திருப்புகழுடன் அருணகிரிநாதரின் பாடல்களான கந்தலரங்காரம், கந்தர் அநுபூதி கந்தர் அந்தாதி, திருவகுப்பு, மயில்விருத்தம், சேவல் விருத்தம், வேல்விருத்தம் போன்றனவும் முற்றோதப்பெற்றன.

## அகண்ட சிவநாம சங்கீர்த்தனம்

14-04-2013 ஞாயிற்றக்கிழமை காலை எட்டரை மணியிலிருந்து மாலை நான்கு மணிவரை அகண்ட சிவநாமசங்கீர்த்தனம் ஆத்மஜோதி இல்லத்தில் திருக்கூட்டத்தினரால் நிகழ்த்தப்பெற்றது. நண்பகல் சிவபூசையும் அன்னதானமும் சிறப்பாக நிகழ்ந்தன.

## பதின்நான்காவது வருடமாகப்பன்னிரு திருமுறை முற்றோதல்

ஒன்ராறியோ இந்து சமயப்பேரவைத்திருக்கூட்டத்தினர் 20-04-2013 சனிக்கிழமை தொடக்கம் பதின்நான்காவது வருடமாக பன்னிருதிருமுறைகளை முற்றோதி வருகின்றனர். வாரந்தோறும்

---

*ஏழைகளின் துயரத்தைத் துடைக்காத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையாகுமா?*

சனி, ஞாயிற்றுக்கிழமை நாட்களில் திருமுறை முற்றோதலும், சிவபூசையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. திருமுறைகளில் ஈடுபாடுள்ள பல திருக்கூட்டத்தினர் பக்தி சிரத்தையுடன் பங்குபற்றி வருகின்றனர்.

**சித்திராபூரணை வழிபாடு**



25-04-2013 வியாழக்கிழமை சித்திராப்பூரணை வழிபாடு காலையில் இருந்து ஆத்மஜோதி இல்லத்தில் ஆரம்பிக்கப்பெற்றது. சித்திர குப்த நாயனார் கதை பக்தி சிரத்தையுடன் திருக்கூட்டத்தினரால் படிக்கப்பெற்றது. நண்பகல் சிவபூசையும், நிகழத்தப்பெற்றுச் சிறப்பான அன்னதானமும் வழங்கப்பெற்றது.

பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்கள் எழுதிய 'முன்னறிதெய்வம்' என்ற சிற்றிலக்கிய நூலும் வெளியிடப்பெற்றது. சைவதுரந்தரர் அவர்கள் தனது தாயாரின் நினைவாக அந்நூலை வெளியிட்டுள்ளார்.

**நடேசர் அபிஷேகம்**



02-05-2013 வியாழக்கிழமை காலை எட்டரை மணிதொடக்கம் ஆத்மஜோதி இல்லத்தில் நடேசர் அபிஷேகத்தை முன்னிட்டு திருவாசகம் திருக்கூட்டத்தினரால் முற்றோதப்பெற்றது. ஆத்மஜோதி இல்லத்தில் வீற்றிருக்கும் நடராஜப் பெருமானுக்கு நண்பகல் சிறப்பான அபிஷேக ஆராதனை நிகழ்த்தப் பெற்றது. திருவாசக முற்றோதல் மாலை நான்கு மணி முப்பது நிமிடமளவில் பூர்த்தி செய்யப்பெற்றது.

**திருநாவுக்கரசு நாயனார் குருபூசை**



அப்பர் சுவாமிகள் என அழைக்கப்பெறும் திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசை அவரின் குருபூசைத்தினமான சித்திரை சதய நட்சத்திரத்தில் காலை எட்டு முப்பது மணிதொடக்கம் மாலை நான்கு மணிவரை பேரவையின் திருக்கூட்டத்தினரால் பக்திப்பரவசமாக நிகழ்த்தப்பெற்றது.

---

*வாழ்க்கை என்ற மரத்திற்கு இளமையில் பயில்வது வேர் போன்றது*

அப்பர் சுவாமிகளின் நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளிலிருந்து தெரிந்து எடுத்த பாடல்கள் முற்றோதப்பெற்றது. நண்பகல் சிவபூசையும் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருஉருவப் படத்திற்கு மலர்தூவி திருவடி வணக்கமும் திருக்கூட்டத்தினரால் பக்தியுடன் செலுத்தப்பெற்றது.

## நூல் வெளியீட்டு விழா

'நாங்கள் ஏன் சமயம் மாறக்கூடாது' என்ற பிரபல நாவல் எழுத்தாளர் பசுந்தீவு கோவிந்தன் அவர்கள் எழுதிய நூல் வெளியீட்டு விழாவை இந்துசமயப்பேரவை கனடா சன்னிதி முருகன் ஆலயத்தில் 25-05-2013 சனிக்கிழமை மாலை ஆறுமணி தொடக்கம் இரவு ஒன்பது மணிவரை மிகவும் சிறப்பாக நடத்தியது பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஆசிஉரையை ஆலயத்தின் அறங்காவலரும், பூசகருமாகிய புவனேந்திரன் ஐயர் அவர்கள் நிகழ்த்தினார்கள். வரவேற்பு உரையை பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் அவர்கள் நிகழ்த்தினார். பேரவையின் ஆயுட்கால உறுப்பினர் சு. சிவதாஸ் அவர்கள் வாழ்த்து உரையை வழங்கினார். நூலின் வெளியீட்டு உரையை திருமதி கோதை அமுதன் அவர்கள் மிகவும் சிறப்பாக நிகழ்த்திச் சபையோரின் பாராட்டைப் பெற்றார். நூலின் ஆய்வு உரையை பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் மிகவும் சிறப்பாக சைவசமயம் தமிழ்மொழி ஆகியவற்றின் சிறப்புக்களையும் வரலாற்றுச் சம்பவங்களையும் எடுத்தியம்பி சைவசமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் ஏற்பட்ட பல இன்னல்களையும் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் விளக்கினார். அவரின் ஆய்வு உரை சபையோரின் சிந்தனைகளுக்கு வலுச்சேர்த்தது.



*ஒவ்வொருவரும் தூயவர்களாக வாழ்ந்தால் அவர்கள் வாழும் நாடு அடிமை இருளில் வீழ்ந்து போகாது.*





நாங்கள் ஏன் சமயம் மாறக்கூடாது என்ற பசுந்தீவு கோவிந்தன் எழுதிய நூல் வெளியீட்டின் பொது நூல் ஆசிரியர் கௌரவிக்கப்படுவதையும், நூற் பிரதி பெறுவதையும் படங்களில் காணலாம்.


ஆய்வு உரையைத் தொடர்ந்து நூலாசிரியர் இ. கோவிந்தன் அவர்கள் பதில் உரையை உணர்வுபூர்வமாக வழங்கிச் சபையோரை உணர்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைத்தார். நன்றி உரையை பேரவையின் உபசெயலாளர் இ. லோகேஸ்வரன் அவர்கள் வழங்கினார். பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் பிறந்தநாளான வைகாசி 25 ஆம்தேதி நூல்வெளியீட்டு விழா நடைபெற்றதுடன் இந்நூல் அவருக்குச் சமர்ப்பணம் ஆக்கப்பட்டுள்ளது. அவரின் அபிலாசைகளை மெருகூட்டுவது போன்று இந்நூல் அமைந்துள்ளது.

## திருஞான சம்பந்தர் குருபூசை



சமய குரவர்களில் முதல்வராகக் கணிக்கப்பெறும் திருஞானசம்பந்த சுவாமிகளின் குருபூசை 26-05-2013 ஞயிற்றுக்கிழமை ஆத்மஜோதி இல்லத்தில் காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை நான்கு மணிவரை வெகுசிறப்பாக நடத்தப்பெற்றது. திருக்கூட்டத்தினர் திருஞானசம்பந்த சுவாமிகளின் முதலாம் இரண்டாம், மூன்றாம் திருமுறைகளில் இருந்து தெரிந்தெடுத்த பாடல்களைப் பக்திப்பரவசமாக ஓதினர். நண்பகல் சிவபூசையும், குருபூசையை முன்னிட்டு விஷேட அன்னதானமும் நிகழ்த்தப்பெற்றது.

## சேக்கிழார் குருபூசை



12-06-2013 புதன்கிழமை சேக்கிழார் பெருமானின் குருபூசை வெகுவிமரிசையாக காலை எட்டுமுப்பது மணி தொடக்கம், மாலை நான்கு மணிவரை நிகழ்த்தப் பெற்றது. பன்னிரெண்டாம் திருமுறையான சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர்புராணத்தில் இருந்து தெரிந்து எடுத்த பாடல்கள் திருக் கூட்டத்தினரால் ஓதப்பெற்றது. நண்பகல் சிவபூசையைத் தொடர்ந்து சேக்கிழார் பெருமானின் திருஉருவப் படத்திற்கு மலர்தூவித் திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் திரு. வி கந்தவனம் அவர்கள் சேக்கிழார்பெருமானைப்பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம்

- நல்ல நடத்தை இல்லாதவர்களோடு நட்புக்கொள்ளுதல் தீய பழக்கங்களை பழகுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும்.

- இணக்கம் என்பது மக்களை அன்பு, நட்பு ஆகிய மூன்று எழுத்துகளினால் பிணைத்து வைக்கக் கூடிய அறுக்க முடியாத இரும்புச் சங்கிலியாகும்.

- இணங்கி வாழக்கூடிய சுபாவம் உள்ள மனிதர்கள் உலகில் எப்பகுதியிலும் வாழமுடியும்.

- இணக்க சுபாவமுள்ளவரைக் கண்டால் மக்கள் தங்களை அறியாமல் அவனை நேசிக்கின்றனர்.

- இணக்க சுபாவம் தியாக மனப்பான்மையை விருத்தி செய்கிறது. இது சுயநலத்தை ஒழிக்கிறது.

- இணக்க சுபாவம் அன்பை வளர்த்து வெறுப்பு உணர்ச்சியை களைத்தெறிகிறது.

- இணக்கம் உள்ளவன் உள்ளச் சமநிலையை வளர்த்து வருகிறான்.

- இணக்க சுபாவம் நாளடைவில் ஆத்மஞானத்தை கொடுக்கும்.

- தம் காரியம் நிறைவேறும் வரை வருத்தத்தை பாராது நண்பரை போல் பழகிப் பின்னர் காரியம் முடிந்ததும் திரும்பியும் பாராதவர்களுடைய நட்பு சேரத்தகாத நட்பாகும்.

- பொறாமை ஆசை கோபம் கடுஞ்சொல் இந்த நான்கும் இல்லாமல் செய்கிற காரியங்களே அறம் எனப்படும்.
  தான் கெட்டாலும் தகுதி வாய்ந்த மேதைகளுக்கு தீமை நினையாதிருக்கக் கடவீர்.

- பொறாமை என்பது மனிதனை அழிக்கும் கொடிய அழிபுண்.

* பெருந்தன்மையான குணத்தை வளர்த்துக் கொள்ளுவதன் மூலம் பொறாமையை ஒழிக்க முடியும்.

* சூதின்மை அறிவுடமை ஆகிய பண்புகளை வளர்ப்பதன் மூலம் கர்வத்தை நீக்கலாம்.

* பொறாமை, அன்பு, சேவை மனப்பான்மை ஆகியவற்றை விருத்திசெய்வதன் மூலம் கோபத்தை அடக்கலாம்.

* உள்ளம் நல்லதானால் நோக்கமும் பயனும் நல்லனவே யாகும்.

* மனத்தாலும் வாக்காலும் பொய் சொல்லாதிருப்பதை காட்டிலும் சிறந்த அறம் வேறில்லை.

* தன்னலம் கருதி ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப்பற்றி இகழந்து பேசுவது வாக்கால் செய்யும் குற்றம்.

* ஆசைகளை அழிப்பதும் இந்திரியங்களை அடக்குவதும் மனத்தை அடக்குவதற்கான முக்கிய படிகளாகும்.

* மனதை அலைய வைப்பது ஆசையாகும்.

* மனத்தினுடைய சஞ்சலத் தன்மையைக் கட்டுப்படுத்து வதற்கு பரிபூரண வைராக்கியம் தேவை.

* தாரனை என்பது ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தில் மனத்தை குவிய வைப்பததுாகும்.

* தகுதி இல்லாதார் நட்பு மிகுவதால் பயன் இல்லாமையோடு இடர்களும் மிகுந்திருக்கும்.

* தாரணையானது (ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தில் மனத்தை குவிய வைப்பது) பரமசந்தோசம், ஆன்மீக பலம், கலப்பற்ற இன்பம், ஞானம், ஆழ்ந்த அகப்பார்வை உள்ளுணர்வு இறைவனோடு ஐக்கியம் ஆகியவற்றைக் கொடுக்கிறது.

Trillium Mortgage

**Mortgage தேவைகளுக்கு அழையுங்கள்**

**Thulasitharan Muthu**
**(Thulasi)**
**Mortgage Agent**

**Direct: 416-839-3444**

Email: thulasi17@hotmail.com

200 Consumers Rd., Suite 301
Toronto, ON. M2J 4R4
Brokerase Licence # 11396

# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள்
இறக்குமதி செய்து விற்பனை
செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION
MONEY TRANSFER**

**GTA MALL, 5215 Finch Ave. E. Unit 109**
**TEL: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT 109-110**
**TEL: 416-269-1994**
**416-807-7468**